வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu
Email : news@eelanadu.lk | மலர் : 03 | 21.03.2022 திங்கட்கிழமை | இதழ் : 106 | பக்கங்கள் : 16




# நாம் ஏற்படுத்திய மாகாண சபை நல்லாட்சியுடன் கலைக்கப்பட்டது

## மட்டுவிலில் பிரதமர் மஹிந்த



தென்மராட்சி, மார்ச் 21

**“அவசரகால சட்டங்களை நீக்கி நாம் ஏற்படுத்திய மாகாண சபை நல்லாட்சியுடன் கலைக்கப்பட்டது. நல்லாட்சியில் யாழ்ப்பாணத்துக்கும் நாட்டுக்கும் ஒரு வீதிகூட கிடைக்கவில்லை”, என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இருநாள் உத்தியோகபூர்வ பயண மாக யாழ்ப்பாணம் வந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று மட்டுவிலில் பொரு ளாதார மத்திய நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றியபோதே மேற்கண் டவாறு கூறினார்.

மேலும், அவர் தனது உரையில் கூறி யவை வருமாறு,

“யாழ்ப்பாணத்தின் மூன்று யுகங் களை நான் கண்டிருக்கிறேன். 1970களில் யாழ்ப்பாணம் எப்படி இருந்தது என்பது எனக்கு நினை விருக்கிறது. அப்போது யாழ். மக் களுக்கும் கொழும்பு மக்களுக்கும் இடையே சிறந்த தொடர்பு இருந் தது. யாழ்ப்பாணத்தில் சிங்கள முதலாளி மார் இருந்தார்கள்.

“இங்கிருந்த பெரும்பாலான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அப்போது கொழும்பில் இருந்த னர். இன்றும் அப்படித் தான். யாழ்ப்பாணத்தி லிருந்து ரயிலிலே கொழும்பு

15



# காங்கேசன் சிமெந்து ஆலையை பிரதமர் மஹிந்த பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யுத்தம் காரணமாக மூடப்பட்ட இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத் திற்கு சொந்தமான காங் கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு பிரத மர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை கண் காணிப்பு விஜயம் மேற் கொண்டார்.

1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காங் கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 1990 ஆம் ஆண்டு யுத்தம் காரண மாக மூடப்பட்டது.

இத்தொழிற்சாலை 728 ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருந்தாலும், தற்போது அதன் பெரும்பாலான

15

# பிரதமருக்கு எதிராக நேற்றும் யாழில் நேற்றும் போராட்டம்!

தென்மராட்சி, மார்ச் 21

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் போரா டச் சென்றவர்களை இடைவழியிலேயே தடுத்து நிறுத் தியதால் மட்டுவில் வண்ணாத்திப் பாலமருகே நேற்று பதற்ற சூழல் நிலவியது.

இரு நாள் உத்தியோகபூர்வ பயண மாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். நேற்று மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்தை திறந்து வைப்பதற்காக சென் றவருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக காணாமல்

15

# தண்ணீர் பரலில் வீழ்ந்து குழந்தை உயிரிழப்பு!

புதுக்குடியிருப்பு, மார்ச் 21

மலசலகூடத் தேவைக்காக வைக்கப்பட்டிருந்த தண்ணீர் நிறைந்த பரலினுள் தவறி வீழ்ந்து குழந்தை ஒன்று உயிரிழந்தது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை புதுக்குடியிருப்பு - கைவேலியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த சியோன்ஷன் என்ற ஒரு வயது குழந்தையே உயிரிழந்தது.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை

15

# பேருந்து கவிழ்ந்து விபத்து; ஒருவர் பலி; 24 பேர் காயம்!

## போட்டியால் முள்ளிவாய்க்காலில் விபரீதம்



முல்லைத்தீவு, மார்ச் 21

இ. போ. ச. பேருந்தும் - தனியார் பேருந்தும் போட்டி போட்டு ஓடியதால் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் மரண மானார். நால்வர் படுகாயமடைந்தனர். 20இற்கும் மேற் பட்டோர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்

முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு வழித் தடத்தில் பயணிக்கும் தனியார் பேருந்தே இவ்வாறு விபத் துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான பேருந்தில் 40 இற்கும் மேற்

15

# மூளாயில் நேற்றிரவு விபத்து; குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 21

இரு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றிரவு 9 மணியளவில் மூளாய் - மாவடி வீதியில், காளி கோயிலுக்கு சமீபமாக இந்த விபத்து இடம்பெற்றது.

15

# சர்வகட்சி மாநாட்டில் தமிழரசு பங்குபற்றும்

கொழும்பு, மார்ச் 21

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக நாளை மறுதினம் புதன் கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட்டியுள்ள சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்று வதற்கு பாராளுமன்றத் தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக் கும் தனித்தனியாக அழைப்பு அனுப் பப்பட்டுள்ளது.

15

# சகல பிரச்னைகளையும் தீர்க்க இறைமை பகிரப்பட வேண்டும்

## சர்வகட்சிகளின் மாநாட்டில் பங்கேற்று வலியுறுத்துவேன் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, மார்ச் 21

“நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளா தார நெருக்கடிகள் உட் பட அனைத்துப் பிரச்ச னைகளுக்கும் தீர்வு காணப் பட வேண்டுமாயின் இறைமை பகிர்ந்தளிக்கப் பட வேண்டும். இதனை சர்வகட்சி மாநாட்டில் சுமந்திரனுடன் பங்கேற்று வலியுறுத்துவேன்”, என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தலைமை யில் நாளை மறுதினம் புதன்கிழமை சர்வகட்சி மாநாடு நடைபெறவுள் ளது. இது தொடர்பில் கருத்து வெளியிடு கையிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

மேலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள சர்வகட்சிகளின்

15

# ஜனாதிபதியுடனான பேச்சில் நாம் பங்கேற்கப்போவதில்லை!

## தலைவர்கள் பிரபாகரன், சபாரெத்தினம் சிந்தனைவழியில் முடிவு என்கிறது ரெலோ



மட்டக்களப்பு, மார்ச் 21

“நாம் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு ஜனாதி பதியின் சாதகமான சமிக்ஞை கிடைக்கும்வரை பேச் சில் நாம் பங்கேற்கப் போவதில்லை” என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமி ழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அறிவித்துள்ளது.

இந்த முடிவை, தலைவர்கள் ஸ்ரீசபாரெத் தினம், பிரபாகரன் ஆகியோரின் சிந்தனை இந்த நேரத்தில் எப்படி இருக்கும் என்று

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசவுள்ள விடயங்கள் தொடர்பில் நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் (ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்) தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் வலியுறுத்தியிருந்தார்.

அவரின் இந்தக் கோரிக்கையை கண்டதும், ஜனாதிபதியுடனான அந்தச் சந்திப்பு எப்படியிருக்கும் என்று இந்த ஊர்க்குருவியின் கற்பனையில் ஒரு திரைப்படம்போல நிகழ்வுகள் வந்து போயின.

இது ஒரு கற்பனை மட்டுமே. இருந்தாலும் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளலாம் போல இருந்தது.

ஜனாதிபதி மாளிகையில் நடக்கின்ற கூட்டங்கள் பற்றிய செய்திகளில் வந்த படங்களையும் காணொலிக் காட்சிகளையும் பார்த்திருப்பீர்கள்.

ஒரு நீண்ட மேசையில் சுற்றிவர கூட்டத்தில் கலந்துகொள்பவர்கள் இருப்பார்கள். அவர்கள் பேசுவதற்காக மைக் இருக்கும். கூடவே மொழிபெயர்ப்பைக் கேட்பதற்காக ஹெட் செற் ஒன்றும் வழங்கப்பட்டிருக்கும்.

யாராவது சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் பேசுகின்றபோது அவர்களுக்கு சிங்களம் அல்லது ஆங்கிலம் புரியாவிட்டால் அந்த ஹெட் செற்றில் தமிழ் மொழிபெயர்ப்பைக் கேட்கலாம்.

நமது தலைவர்கள் பதினொரு பேரும் உரிய நேரத்திற்கு ஜனாதிபதி மாளிகைக்கு போய்விடுவார்கள். ஆனால், இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாக ஏற்பாடு செய்யப்பட்ட மற்றுமொரு சந்திப்பில் ஜனாதிபதி கலந்துகொண்டிருப்பார். அதனால் அவர்களை அது முடியும்வரை காத்திருக்கச் சொல்வார்கள். சிலவேளைகளில் முதல் சந்திப்பு நேரத்துடன் முடிந்தும் விடலாம்.

சந்திப்புக்கு ஜனாதிபதி தயாரானதும், இவர்களை மாநாட்டு மேசையில் ஒவ்வொரு ஆசனங்களிலும் அமரச் சொல்வார்கள். இவர்கள் அனைவரும் வந்து அமர்ந்துவிட்டதும், ஜனாதிபதி மாநாட்டு அறைக்கு வருவார்.

நமது தலைவர்கள் அனைவரும் பவ்வியமாக எழுந்து நின்று அவருக்கு "உரிய மரியாதை"யை கொடுப்பார்கள்.

எல்லோரும் அமர்ந்த பின்னர், " சரி சொல்லுங்கள்.. நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்?" என்று சிரித்துக்கொண்டே ஜனாதிபதி கேட்பார்.

உடனே எமது பெருந்தலைவர் சம்பந்தன் ஐயா தொடங்குவார்.

அறுபதுகளிலிருந்து தமிழர்கள் நடத்தி வருகின்ற போராட்டங்கள், கோரிக்கைகள், இதுவரை செய்துகொண்ட பண்டா- செல்வா ஒப்பந்தத்தில் இருந்து கடைசியாக நல்லாட்சி அரசில் தயாரித்த "எக்க ராஜ்ய" அரசியலமைப்பு நகல் வரை ஐயா பேசி முடித்த பின்னர், ஜனாதிபதி சிரித்துக்கொண்டு, எதையோ சொல்ல வர, நமது மாவை அண்ணர் தான் இருப்பதையும் ஞாபகப்படுத்த, தமிழ் கலந்த ஆங்கிலத்தில், "நாங்கள் உங்கள் அண்ணர் ஆட்சிக் காலத்திலும் நீண்டகாலம் பேச்சு நடத்தினோம், அதுபோல உங்கள் காலத்திலும் நடப்பது மகிழ்ச்சி" என்று முடிப்பார்.

இதுவரை சம்பந்தன் பேசியதை, ஹெட் செற்றில் தமிழில் கேட்டுக்கொண்டிருந்த செல்வம் அடைக்கலநாதன், மைக்கைத் தட்டிவிட்டு, "நாங்கள் தொடர்ந்து பேசுவதென்றால், ஆகக் குறைந்தது- தமிழ் மக்களுக்கு இனப்பிரச்னை என்ற ஒன்று இருக்கின்றது என்பதையாவது நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று தமிழில் சொல்லி முடித்தபின்னர் தான், அதன் மொழிபெயர்ப்பை கேட்பதற்கு தான் "ஹெட் செற்"றை போடவில்லை என்பதையே ஜனாதிபதி உணர்ந்துகொண்டு அதனை எடுத்து காதில் போடுகின்றபோது, செல்வம் தான் சொல்ல வந்தவற்றை சொல்லி முடித்திருந்தார்.

ஜனாதிபதி, திரும்பி சாணக்கியனைப் பார்த்தார்.

சாணக்கியன், சிங்களத்தில் பேசத் தொடங்கியபோது, நம்மவர்கள் எல்லோரும் ஹெட் செற்றை காதில் போட்டுக்கொண்டனர்.

"பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக் கோரி நாங்கள் மக்களிடம் கையெழுத்துப் பெறுவதை அறிந்திருப்பீர்கள். சிங்கள மக்ளிடமும் நாங்கள் கையெழுத்துப் பெறுவது எங்கள் மத்தியில் இன நல்லெண்ணத்தை வளர்ப்பதற்காகத்தான். எனது பேரனார் தமிழ் அரசு தலைவராக இருந்தபோதிலும் இன நல்லுறவை வளர்க்க தனது மகனை அதாவது எனது தந்தையை ஒரு சிங்கள பெண்ணுக்கு திருமணம் செய்து கொடுத்து அந்தக் காலத்திலேயே இனநல்லுறவை வளர்த்தவர். அவர் பாணியிலேயே நானும் இனங்களுக்கிடையே நல்லுறவை பேண என்னால் முடிந்ததைச் செய்துகொண்டிருக்கின்றேன்" என்றார்.

அதுவரை அமைதியாக இருந்த சுமந்திரன் எதனையோ தொடங்க தயாரானபோது, ஜனாதிபதி குறுக்கிட்டார்.

"சில நாட்களுக்கு முன்னர் நீங்கள் எல்லோரும், கைகளில் பதாகைகளை வைத்துக்கொண்டு எனது அலுவலகத்திற்கு முன்னால் நின்றீர்கள். என்னை சந்திக்க நீங்கள் கேட்டபோது, நான் ஏற்கனவே திட்டமிட்ட ஒரு முக்கியமான கூட்டத்தில் இருந்தேன். அதனால் சந்திக்க முடியவில்லை. அன்று எதற்காக சந்திக்க விரும்பினீர்கள் என்பதை அறியத்தான் உங்களை வரச் சொல்லியிருந்தேன். மிஸ்டர் சுமந்திரன், நீங்கள் ஏதோ சொல்ல வந்தீர்கள் சொல்லுங்கள்" என்றார்.

இதனை சற்றும் எதிர்பாராத சுமந்திரன், "அது வந்து... எமது மக்களின் காணிகள் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு அபகரிக்கப்படுகின்றன. அதுதொடர்பாக தங்கள் கவனத்துக்கு கொண்டுவரவே அன்று வந்திருந்தோம்" என்றார்.

"அப்படி நடக்கின்றதா? அது குறித்து விபரங்களைத் தாருங்கள். என்ன என்று பார்க்கிறேன். உங்களுக்காக சிறிய தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. தவறாமல் அங்கே செல்லுங்கள். நாம் அடிக்கடி சந்திப்போம்" என்று கூறிவிட்டு ஜனாதிபதி விடைபெற்றார்.

**- ஊர்க்குருவி**

# யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்பட்ட 12.5 கோடி ரூபாய் தங்கம் சிக்கியது

*கொழும்பு, மார்ச் 21*

சுமார் 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 6 கிலோ தங்கத்தை இந்தியாவிற்கு கடத்த முயன்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெல்லம்பிட்டியைச் சேர்ந்த 38 வயது நபர் ஒருவர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பேருந்தில் பயணித்த போது, குறித்த தங்கத்துடன் ஆமர் வீதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த தங்கம் சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்கு கடத்த தயாராக இருந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து இந்த மோசடியில் ஈடுபட்ட மாதகல் பகுதியைச் சேர்ந்த 40 வயது நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய வேறு சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# சோமலியா போன்று இங்கும் பஞ்சம் ஏற்படும்!

## இராதகிருஷ்ணன் எம். பி.

*நுவரெலியா, மார்ச் 21*

இலங்கையில் மிக விரைவில் சோமாலியாவைப் போல பஞ்சம் ஏற்படலாம். அதனை சந்திப்பதற்கு நாம் தயாராக வேண்டும். அரசாங்கத்தின் தீர்க்கதரிசனமற்ற செயல்பாடுகளால் இந்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்று நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தின விழா நேற்று பதுளையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், இன்றைய சூழ்நிலையில் இலங்கையில் பெரும் பாதிப்பை சந்தித்திருப்பவர்கள் பெண்களே. அவர்கள் ஏற்கனவே குடும்ப தலைவிகளாக செயற்பட்டு வருகின்ற நிலையில் இந்த பொருளாதார பின்னடைவு காரணமாக பெரும் பாதிப்பை அவர்கள் சந்தித்திருக்கின்றார்கள்.

பெண்களுடைய பால் நிலை சமத்துவத்தை நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். ஆனால், இன்று அந்த சமத்துவம் இருக்கின்றதா? என்ற கேள்வி எழுகின்றது எனவும் தெரிவித்த அவர், வெறுமனே சர்வதேச தினத்தில் பெண்களை கொண்டாடுவதால் மாத்திரம் பெண்களின் உரிமைகளை பெற்று விட முடியாது. அரசியலில் 25 வீதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற நிலை இருக்கின்றது. ஆனால, அது உள்ளூராட்சி தேர்தல்களில் மாத்திரமே அது நடைமுறையில் இருக்கின்றது. பாராளுமன்றத்தில் அந்த நிலை இல்லை. அதனை கொண்டுவர வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக மலையக மக்கள் முன்னணின் உறுப்பினர் ஒருவர் வெற்றி பெறுவார். அதற்கான முழு ஒத்துழைப்பையும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் ஆகியோர் எமக்கு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது - என்றார். (ஐ)

## இலவச சித்த மருத்துவ முகாம்!

*மன்னார், மார்ச் 21*

யாழ். இந்திய துணைத் தூதரகமும், வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச சித்த மருத்துவ முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முருங்கன் டொன் பொஸ்கோ ரெக் மண்ட பத்தில் இடம்பெற்றது.

விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் ராகேஷ் நடராஜன், வட மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் வைத்தியர் திருமதி ஜொபநாம கணேசன் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## மரக்கறிகளின் விலையில் நேற்று பெரும் வீழ்ச்சி!

*கொழும்பு, மார்ச் 21*

மரக்கறிகளின் மொத்த விலை, நேற்று காலை பெரும் வீழ்ச்சியடைந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் கடந்த வாரம் பெருமளவில் அதிகரித்து காணப்பட்ட மரக்கறிகள் தற்போது விற்பனையாகாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறிகள் வாங்க வரும் வியாபாரிகள் வருகை தராததும், எரிபொருள் தட்டுப்பாடுமே மரக்கறிகளின் விலை வீழ்ச்சி மற்றும் விற்பனையின்மைக்கு முக்கிய காரணம் என விவசாயிகள் கூறுகின்றனர். தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் இருந்து பெருந் தொகையான மரக்கறிகள் வந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சர்வகட்சி கூட்டத்துக்கு அழைப்பு வரவில்லை!

## திஸ்ஸ அத்தநாயக்க சொல்கிறார்

*கொழும்பு, மார்ச் 21*

சர்வகட்சி கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான அழைப்பு இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

சர்வகட்சி கூட்டம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அக்கட்சியின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இதனை தெரிவித்தார்.

அழைப்பை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பது குறித்து கட்சியின் பாராளுமன்ற குழு மற்றும் நிர்வாகக் குழுவால் தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும், எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கு அரசாங்கம் செவிசாய்க்காத சூழ்நிலையில் இவ்வாறான சர்வகட்சி கூட்டம் நடத்தப்படுமா என்பது சந்தேகமே என்றார். (ஐ)

# சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் பூட்டு

*கொழும்பு, மார்ச் 21*

சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் எரிபொருள் சுத்திகரிப்பு நடவடிக்கைகள், இன்றுமுதல் இடைநிறுத்தப்படும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க தெரிவித்தார்.

பல விலை மனுக்கள் பெறப்பட்டுள்ளதாகவும் போதுமான மசகு எண்ணெய் கிடைத்த பின்னர், எரிபொருள் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் ஏப்ரல் மாதம் மீண்டும் ஆரம்பிக்கும் என்றும் தெரிவித்தார்.

இப்போது நாடு பெற்றோல், டீசல், ஜெட் எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் போன்ற சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் இருப்புகளைப் பெறுகிறது என்று குறிப்பிட்ட அவர், ஏப்ரல் மாதத்தில் தொடர்ந்து மசகு எண்ணெய் கிடைத்தால், நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது - என்றார்.

போதுமான மசகு எண்ணெய் கிடைக்கும் வரை இந்த செயல்முறை தொடரும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu 21.03.2022 திங்கட்கிழமை ஈழநாடு
பிலவ வருடம், பங்குனி 07

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# தமிழர்களுக்கு எதுவுமில்லையென்றவர்கள்?

இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கி சரிந்து கொண்டிருக்கின்றது. திட்டமிடப்படாத மக்கள் கிளர்ச்சிகள் தோன்றக்கூடுமென்று, புலனாய்வு பிரிவு எச்சரித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. மண்ணெண்ணெய் வாங்குவதற்காக வரிசையில் நின்றதால், இதுவரையில், இரண்டு முதிவர்கள் இறந்திருக்கின்றனர். இந்த நிலையில் மக்கள் ஆவேசப் படுவது இயல்பான ஒன்றே. நெருக்கடி நிலைமை அதிகரித்துச் செல்லும் நிலையில்தான் அரசாங்கம் சர்வகட்சி மாநாட்டை கூட்டியிருக்கின்றது.

உண்மையில் யுத்தம் நிறைவுற்றதை தொடர்ந்து, மஹிந்த ராஜபக்க்ஷ தமிழ் மக்களின் தேசிய பிரச்னைக்கு நியாயமான தீர்வை கண்டிருக்க வேண்டும். கூட்டமைப்புடன் 19 சுற்று பேச்சுக் களை நடத்திய போதிலும், மஹிந்த ராஜபக்ஷ பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு முயற்சிக்கவில்லை. ஒரு உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தவுடன், செய்ய வேண்டிய முதல் பணி - அந்த யுத்தத்துக்கான காரணங்களை ஆராய்ந்து, மீண்டுமோர் இன முறுகல் நிலைமை ஏற்படுவதை தடுக்கும் நோக்கில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாய மான தீர்வைக் காண வேண்டும் - அனைத்து மக்களையும், தேச நிர்மாணத்தில், சமமாக உள்வாங்கிக் கொள்ளும் வகையில் செயல் பட்டிருக்க வேண்டும். ஆனால், யுத்த வெற்றியை கொண்டாடுவதில் காண்பித்த ஆர்வத்தில் ஒரு சிறு பங்கைக்கூட, பிரச்னையை தீர்க்க வேண்டுமென்பதில் மஹிந்த ராஜபக்க்ஷ காண்பிக்கவில்லை.

இலங்கைத் தீவில் ஒரு துண்டு நிலத்தைக்கூட தமிழ் மக்களுக்கு வழங்குவதில்லையென்னும் இறுமாப்பில் இருந்தனர். பண்டா - செல்வா ஒப்பந்த காலத்திலிருந்து, தமிழ் மக்களின் ஆகக் குறைந்த கோரிக்கைகளுக்குக்கூட, இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் காதுகொடுக்கவில்லை. இதன் விளைவாகத்தான் தமிழ் ஆயுத கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டது. அது ஓர் உள்நாட்டு யுத்தமாக பரிணமித்தது.

தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதையும், அவர்களுக்கென்று வரலாற்று வாழ்விடமொன்றுண்டு என்பதை யும் - எப்படியாவது இல்லாமலாக்கிவிட வேண்டும் என்பதிலேயே சிங்கள ஆளும் வர்க்கம் திடசங்கற்பம் பூண்டிருந்தனர். இதில், எந்தக் கட்சியும் ஒன்றைவிட மற்றொன்று குறைந்ததல்ல. அமைதி யைப் போதிக்க வேண்டிய, பௌத்த மகா சங்கத்தினரும் சிங்கள பெருந்தேசியவாத அரசியலுக்கு, உரமிடுபவர்களாகவே இருந்தனர் - இருக்கின்றனர். இந்த சிங்கள இறுமாப்பின் விளைவே, இலங்கை யின் இன்றைய நிலைமை.

இந்த நாடுகளை இனி எவர் நினைத்தாலும், வெளியாரின் செல்வாக்கிலிருந்து மீட்க முடியாது. தமிழர்களுக்கு மட்டும் எத னையும் கொடுக்கமாட்டோமென்னும், சிங்களத்தின் விரதத்தால் எதைச் சாதிக்க முடிந்தது? போர் வெற்றியால் நாட்டை சுபீட்சமான பாதையில் கொண்டுசெல்ல முடிந்ததா? ஏதாவது ஒரு விடயத்திலா வது முன்னேற்றத்தைக் காண்பிக்க முடிந்ததா? அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள விடயங்களைக் கூட, சிங்கள ஆட்சியாளர்கள் நிறைவேற்ற முன்வரவில்லை. ஏனெ னில், ஒரு சிறு வாய்ப்பையும், தமிழர்களுக்கு வழங்கிவிடக்கூடாது. இந்த பெருந்தேசியவாத சிங்கள அரசியல் கலாசாரம், சிங்கள மக்களுக்கு பெற்றுக் கொடுத்தது என்ன?

# ஆபத்பாந்தவன் இந்தியா!

- அலசுவது இராஜதந்திரி -



இந்தியா தனது நட்பை வெளிப்படுத்தி சிக்கலான பொருளாதார நிலவரத்தை கையாள எவ்வித நிபந்தனையுமின்றி ஒரு பில்லியன் டொலர் கடனுதவியை இலங் கைக்கு வழங்கியள்ளது என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இன்று நேற்றல்ல. இந்தியா எப் போதும் இலங்கைக்கு துணை நின்றே வருகின்றது. பொருளாதார உதவிகள் மட்டுமன்றி, அரசி யல் - இராணுவ ரீதியாகவும், இயற்கை அனர்த்தங்களின் போதும் இந்தியா இலங்கைக்கு எப்போதும் உதவியே வருகின்றது.

ஆனால், “வயிறு வரண்டு” போகும் போது இந்தியாவிடம் உதவி கோரும் இலங்கை, ஏனைய தருணங்களில் இந்தி யாவை ஒருவித கசப்புணர்வோடு நோக்குவதையே அவதா னிக்க முடியும்.

இந்தியா இலங்கைக்கு உணவு உட்பட ஏனைய அத்தியாவசிய பண்டங்களை கொள்வனவு செய்யவே ஒரு பில்லியன் அமெ ரிக்க டொலரை கடனுதவியாக வழங்கியுள்ள தாகவும் வட்டியில்லாத இப்பெருந் தொகையை இலங்கை மூன்று வருட காலத் தில் இந்தியாவுக்கு மீளச்செலுத்த வேண்டு மெனவும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இத்தருணத்திலேயே 1987ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக “ஒப்ரேஷன் லிபரேஷன்” என்று வடமராட்சியில் முதலாவதாக ஆரம் பித்த இராணுவ நடவடிக்கையின்போது இந்தியா பாதிக்கப்பட்ட வட பகுதி மக்க ளுக்கு “ஒப்ரேஷன் பூமாலை” என்ற பெயரில் ஆகாய மார்க்கமாக உணவு, மற்றும் மருந்து வகைகளை தரையில் போட்ட நிகழ்வும் ஞாபகத்துக்கு வருகின்றது.

அன்று இந்தியாவை தென்னிலங்கையர் கள் கடுமையாக சாடியிருந்தனர். அவ்வாறு இந்தியாவை தூற்றியவர்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் அவர்களோடிணைந்த இடதுசாரிகளுமே முன்னின்றனர்.

இந்திய விமானங்கள் வடபகுதியில் வட்ட மடித்து உணவு மற்றும் மருந்து பொட்டலங் களை பராசூட்கள் மூலமாக தரை இறக்கியி ருந்தது. இந்த நடவடிக்கைக்கு நையாண்டித் தனமாக பதிலளிப்பது போல தென்னிலங்கை யில் சிலர் வாடகைக்கு சிறிய விமான மொன்றை அமர்த்தி உணவுப்பொட்டலங்கள் சிலவற்றை கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ் தானிகராலய வளவுக்குள்ளேயும் போட்டி ருந்தனர். ஆனால், இன்றைய பொருளாதார சிக்கல்களிலிருந்தும் மீள்வதற்கு குறிப்பாக அத்தியாவசிய பண்டங்களான உணவு, மருந்து வகைகள் என்பவற்றை கொள்வனவு செய்ய ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் களை இந்தியாவிடம் தற்போது இலங்கை கடனாக பெற்றுள்ளது.

ஏற்கனவே இலங்கையில் பல பகுதிகளை சீனாவுக்கு தாரைவார்த்து கொடுத்து அந்நாட் டின் “வேதாளப்பிடி”க்குள் சிக்குண்டுள்ள இலங்கை, தற்போது பொருளாதார உணவு, மருந்து தட்டுப்பாட்டை மட்டுமல்ல. எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டையும் பெரிதும் சந்தித்துள்ளது.

இலங்கையை பொறுத்தவரை இந்தி யாவை சரிவர எடைபோடாதிருந்ததே முக்கிய தவறாக இருக்கின்றது. இந்தியா தற்போது ஆசியாவில் ஒரு முக்கிய பொரு ளாதார வல்லரசாக இருக்கின்றது.

இந்தியா இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை ஒரு சிக்கலான பொருளாதாரத் தைக் கொண்ட நாடாகவே விளங்கியிருந்தது. இருந்தபோதிலும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் நிதி அமைச்சராக இருந்தபோது பல முற்போக் கான பொருளாதார நடைமுறைகளைக் கையாண்டு இந்தியாவின் பொருளாதாரத்தை பலமடைய வைத்திருந்தார். டாக்டர் மன் மோகன்சிங்கின் இந்தியா தொடர்பான பொருளாதார நிபுணத்துவத்தை சர்வதேச சமூகமும் வெகுவாக பாராட்டியிருந்தது.

இந்தியாவின் நவீன பொருளாதார திட்டத்தின் பிதாமகர் என புகழப்பட்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் மன்மோகன்சிங் வகுத்துக்கொடுத்த விதிமுறைகளையே இந்தியாவில் எந்தவொரு கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பெரிதும் முன்னு தாரணமாக கொள்வதை அவதானிக்க முடியும்.

இதன்காரணமாகவே இந்தியா இன்று பொருளாதார ரீதியாக உறுதிப்பாட்டை பேணுகின்ற நாடாக இருப்பதோடு இலங்கைக்கும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

இந்தியாவிடம் இலங்கை நிதி உதவியை மட்டுமல்ல. அந்நாட்டிடமிருந்து பொருளா தார நிபுணத்துவ ஆலோசனைகளையும் பெற வேண்டியதே காலத்தின் தேவையாகின்றது.

ஏனெனில், இன்றைய இலங்கையின் பொருளாதாரத்தை சீர்செய்வதற்கு இலங்கை யில் திறமையான நிபுணத்துவம் கொண்டவர் கள் காணப்படவில்லை.

இந்தியாவைப் பெறுத்தவரை இலங்கை அதன் ஒரு மாநிலத்தினுள் இருக்கக்கூடிய பிராந்தியம் போன்றே காணப்படுகின்றது. எனவே, இலங்கையின் பொருளாதாரத்தை சீர் செய்வது இந்தியாவுக்கு ஒரு சவாலாக இருக்க முடியாது.

இந்தியாவிடம் பண உதவியை மட்டு மல்ல. நிபுணத்துவ ஆலோசனைகளையும் இலங்கை பெற வேண்டியதே இன்றியமை யாதாகின்றது.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மாசி - 21 திங்கட்கிழமை
பிலவ வருடம் - பங்குனி 07
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 09.00
திதி : சதுர்த்தி




**மேடம்**
முயற்சிகளில் இருந்து வந்த தடை, தாமதம் நீங்கும். புதிய பொறுப்பு கிடைத்து, முன்னேற்றம் அடைவீர்கள். சோம்பல், சோர்வு அண்டாமல் இருக்க கவனம் தேவை.

**இடபம்**
பொழுது போக்கில் கவனம் அதிகரிக்கும். கொடுக்கல் - வாங்கலில் அவசர முடிவு எடுக்காமல் இருப்பது நல்லது. புதிய தொழில் செய்யும் எண்ணம் உண்டாகும்.

**மிதுனம்**
பணி முயற்சியில் வெற்றி வாகை சூடும்நாள். புதிய விஷயம் ஒன்றைக்கற்றுக் கொள்வீர்கள். வாகனத்தை சீர்செய்வீர்கள். சகஊழியர் உதவுவார்கள்.

**கடகம்**
வெளியூர் செல்வீர்கள். எதிர்பாராத செலவுகள் வரலாம். குடும்பத்தில் பிரச்னைகளுக்குப் புதிய தீர்வு கிடைக்கும். அளவில் சிறியதான நல்ல விஷயம் ஒன்று நடக்கும்.

**சிம்மம்**
பொழுதுபோக்கு அம்சங்களினால் மனம் குதூகலிக்கும். நினைத்தது நிறைவேறும். விட்டுக் கொடுத்துப்போவது நல்லது. குடும்பத்தினர் விருப்பம் ஒன்று நிறைவேறும்.

**கன்னி**
பழைய நட்பை மறுபடியும் சந்திக்க வாய்ப்பு வரும். இழந்திருந்த தன்னம்பிக்கை துளிர்விடும் நாள். பணியிடத்தில் உள்ளோரை அனுசரித்துச் செல்ல வேண்டும்.

**துலாம்**
புதிய அன்பளிப்புகள்,சலுகைகள் கிடைக்கும். எதிர்பாராத திருப்பங்கள் நிறைந்த நாள். மன நிறைவு கூடும். நினைத்த விஷயம் ஒன்றில் அமோக வெற்றி கிடைக்கும்.

**விருட்சிகம்**
தடை அகலும். சருமப்பிரச்னை தீரும். பிஸியான நாள். தனலாபம் கிடைக்கும்.குடும்பத்தினர் மனம் மாறுவார்கள். பயணங்கள் மேற்கொள்வீர்கள். மன தைரியம் அதிகரிக்கும்.

**தனுசு**
இன்று வேலைக்கான முயற்சி செய்வோர் வெற்றி பெறுவார்கள். திருமண தொடர்பான முயற்சியால் சந்தோஷம் அதிகரிக்கும். உங்கள் குடும்ப விவகாரங்களில் சுமுகமான தீர்வு கிடைக்கும்.

**மகரம்**
பேச்சு சாமர்த்தியத்தினால் வருமானம் அதிகரிக்கும். எதையும் சமாளிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வீர்கள். வெளியூர், வெளிநாடு செல்ல திட்டமிடும் எண்ணம் மேலோங்கும்.

**கும்பம்**
பணியிடத்தில் நன்மை நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். வங்கிக்கடன்களுக்கு நண்பர்கள் உதவியால் அனுமதி கிடைக்கும். குழந்தைகளின் செயல்பாடுகளால் மனதில் நிம்மதி கூடும்.

**மீனம்**
குடும்பத்தில் ஆரவாரம் இல்லாமல் ஆக்கப்பணி நடக்கும். பேச்சிலும், செயலிலும் கவனம் அதிகரிக்க வேண்டிய நாள். வாகனத்தை சரி செய்வீர்கள். வீடு வாங்க ஏற்பாடுகள் நடக்கும்.

# முதலமைச்சர் ஸ்டாலின் டில்லி விஜயம் அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

சென்னை, மார்ச், 21,
தமிழக முதல்வர் ஸ்டாலின் ஏப்ரல் 2 ஆம் திகதி புதுடில்லி செல்கிறார். அங்கு, புதிதாக கட்டப்பட்டுள்ள தி.மு.க. அலுவலகத்தை திறந்து வைக்கிறார். இதன்போது அவர் நடத்தவுள்ள பேச்சுவார்த்தைகள், சந்திப்புக்கள் தேசிய அளவில் முக்கியத்துவம் பெறுவதால் ஊடகங்களின் கவனம் அங்கு குவிந்துள்ளது.



ஸ்டாலினின் டில்லி பயணம் தேசிய அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துமா என அரசியல் வட்டாரங்கள் ஆவலோடு காத்திருக்கின்றன. காரணம், அவர் இரண்டு அரசியல் பெண்மணிகளை ஓரணியில் திரட்ட எடுத்து வரும் முயற்சிகள் தான்.

அந்த இரு பெண்மணிகள், காங்கிரஸ் தலைவர் சோனியா மற்றும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி. தி.மு.க.அலுவலக திறப்பு விழாவிற்கு சோனியா, மம்தா, சரத் பவார் இவர்களோடு அரவிந்த் கெஜ்ரிவாலையும் அழைத்துள்ளாராம் ஸ்டாலின். இந்த விழா, எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை எடுத்துக்காட்டும் விதமாக இருக்க வேண்டும் பா.ஜ., பிரதமர் மோடிக்கு சவால் விடும் வகையில் இருக்க வேண்டும் என ஸ்டாலின் திட்டமிடுகிறார்.

மோடியை எதிர்க்க, தன் தலைமையின் கீழ் எதிர்க்கட்சிகள் ஒன்று திரள வேண்டும் என மம்தா பானர்ஜி கூறி வருகிறார். ஆனால் ஸ்டாலினோ, "தேசிய கட்சியான காங்கிரஸ் தலைமையில் ஒன்று திரண்டு, 2024 லோக் சபா தேர்தலில் மோடியை எதிர்க்க வேண்டும்" என்கிறார். ஸ்டாலினின் எதிர்க் கட்சி ஒருங்கிணைப்பு முயற்சி என்னவாகும் என்பது, ஏப்ரல் 2ல் தெரிந்துவிடும்.

# மேகதாது அணை கட்ட கர்நாடகம் தீவிரம் தி.மு.க அரசு மௌனமாக இருப்பது ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் எடப்பாடி பழனிசாமி

சென்னை, மார்ச், 21,
மேகதாதுவில் புதிய அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சியை உடனே தடுத்து நிறுத்தவேண்டும் என்று தமிழக அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "கர்நாடக மாநில முதல்வர் பசவராஜ் பொம்மை தலைமையில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் புதிய அணை கட்டுவது குறித்து விவாதிக்க, அனைத்துக் கட்சிக் கூட்டம் பெங்களூருவில் நடைபெற்றது. அங்கு நடைபெற்ற கூட்டத்தில், உடனடியாக காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் புதிய அணை கட்டவேண்டும் என்று முடிவெடுத்துள்ளனர்.

மேலும், மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சரை சந்தித்து, கர்நாடகாவில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் முடிவினை எடுத்துக் கூறி, காவிரியின் குறுக்கே மேகதாதுவில் புதிய அணை கட்டுவதற்கு மத்திய அரசின் அனுமதியை உடனே வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைக்க முடிவு செய்துள்ளனர்.

கர்நாடக அரசு மேகதாதுவில் அணையை கட்டுவதன் மூலம் தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய காவிரி நீருக்கு தடை ஏற்படும் என்பதை உணராத இந்த தி.மு.க. அரசு, மேகதாதுவில் புதிய அணை கட்டுவதற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்ததற்கும், அனைத்துக் கட்சிக் கூட்டம் குறித்தும் எந்த விதமான எதிர்ப்பையும் தெரிவிக்காமல் வாய் மூடி மௌனமாக இருப்பதை ஏற்க முடியாது" என்று அவர் கூறியுள்ளார்.

# ஸ்டாலினின் பிரதமர் கனவு பலிக்காது; 400 எம்பிக்களுடன் ஆட்சியமைப்போம்



## தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை

சென்னை, மார்ச், 21,
"பிரதமர் கனவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, கேரள முதல்வர் பினராயி விஜயன் உட்பட பலர் உள்ளனர். எப்படியிருந்தாலும், 400 எம்பிக்களுடன் பாஜக மீண்டும் ஆட்சியை பிடிக்கும்" என்று தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் அண்ணாமலை, செய்தியாளர்களிடம் பேசுகையில், "எதெடுத்தாலும் மத்திய அரசு மீது பழிபோட்டு வந்த தமிழக அரசு, நிதி நிலை அறிக்கையில் மத்திய அரசு நிலுவை தொகையை வழங்கியதாக எழுத்துபூர்வமாக தெரிவித்துள்ளது.

பிரதமர், துணை பிரதமர் கனவில் பல தலைவர்கள் உள்ளனர். இந்த கனவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, கேரள முதல்வர் பினராயி விஜயன் உட்பட பலர் உள்ளனர். எப்படியிருந்தாலும் 400 எம்பிக்களுடன் பாஜக மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும்" என்று கூறினார்.

# சுதந்திரம் கிடைத்த வரலாற்றையே மாற்றி எழுதினாலும் எழுதுவார்கள்

## ப.சிதம்பரம் விமர்சனம்

சென்னை, மார்ச், 21,
இந்தியாவிற்கு 2014இல் சுதந்திரம் கிடைத்ததாக வரலாற்றை மாற்றி எழுதினாலும் எழுதுவார்கள் என முன்னாள் அமைச்சரும் காங்கிரஸ் பிரமுகருமான ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் குமரி ஆனந்தனின் 90ஆவது பிறந்த நாள் விழா, தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகமான சென்னை ராயப்பேட்டையில் உள்ள சத்தியமூர்த்தி பவனில் கொண்டாடப்பட்டது.

இங்கு சிதம்பரம் பேசுகையில், "1930 ஆம் ஆண்டு என்ன நடந்தது? என்றால் பலருக்கு தெரியாது. 1929-ல் என்ன நடந்து என்றால் அதுவும் பலருக்கு தெரியாது. நல்லவேளையாக 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது என்பதாவது பல பேருக்கு தெரியும் என நினைக்கிறேன். இன்னும் கொஞ்ச காலத்திற்கு பிறகு 2014 ஆம் ஆண்டில் தான் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தது என்று வரலாற்றை மாற்றி எழுதினாலும் எழுதுவார்கள்" என்று அவர் கூறினார்.

## அயலானை அன்பு செய்வோம்



ஏழை, எளியோருக்கு, நோய்வாய்ப் பட்டோருக்கு, பாவிகளுக்கு, அடக் கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், தேவையில் இருப்போருக்காக எங்கள் செபங்களும், தவங்களும், செயற்பாடு களும் அமைய வேண்டும். மாறாக என் னுடையவர், உறவினர், உடன்பிறப்பு கள் என்றும் எம் பணிகள் அமையக் கூடாது. ஏனெனில் இயேசு இத்தகை யோருக்காக இவ்வுலகுக்கு வந்தார். அவருடைய பணி வாழ்வும் இவர்களுக்காகவே இருந்தது.

இயேசு அவருடைய சொந்த மக்களே ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் அவர்கள் அவரை மீட்பராக, இரட்சகராக, மெசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய பணி வாழ்வும் நாடோடி போல் எல்லா மக்களுக்கும் குறிப்பாக சமுதாயத்தில் ஒதுக்கப்பட் டவர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும், நோயினால் வருந்திய வர்களுக்கும் இருந்தது. அவர் இத்தகைய மக்களைத் தேடிப்போய் உதவி செய்தார். அவர் அவர்கள் ஆயனில்லா ஆடுகள் போல் இருப்பதைக் கண்டு அவர்கள் மேல் மனம் இரங்கினார்.

எமது பணி வாழ்விலும் தேவையில்லா விமர்சனங்களும் கேலிகளும் அவதூறுகளும் வரலாம். அவற்றைக் கண்டு துவண்டு விடாது இத்தவக்காலத்தில் திடமான மன உறுதி பூண்டு யேசு வின் பின்னால் எமது சிலுவைகளை சுமந்து செல்வோம்.

அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.

# மட்டுவில் பொருளாதார நிலையம் நேற்று திறந்து வைத்தார் பிரதமர்!

தென்மராட்சி, மார்ச் 21

**மட்டுவிலில் அமைக்கப்பட்ட விசேட பொரு ளாதார மத்திய நிலையத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று திறந்து வைத்தார்.**

விவசாயிகள் தமது உற்பத் திகளை தகுந்த விலையில் விற் பனை செய்வதற்கும், நுகர் வோர் குறைந்த விலையில் மரக் கறிகள், பழங்களை கொள்வ னவு செய்வதற்குமான வசதி களை உருவாக்கும் நோக்கில் 20 கோடி ரூபாய் செலவில் இந்த யாழ்ப்பாணம் விசேட பொரு ளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டது.

இரு நாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த நிலை யத்தை நேற்று திறந்து வைத் தார். இந்த நிகழ்வில், கமத் தொழில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் அங்கஜன் இராமநாதன், மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் துறைசார் அதிகாரிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ - 3)



## நல்லூர் ஆலய வழிபாட்டை தவிர்த்தார் பிரதமர் மஹிந்த!

யாழ்ப்பாணம், மார்ச் 21

எதிர்ப்பு போராட்டம் முன் னெடுக்கப்படுவதாகக் கூறப் பட்ட நிலையில் நல்லூர் கந்தன் ஆலய வழிபாட்டை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று தவிர்த்திருந்தார். இந்நிலையில், நேற்றைய தினம் அவர் மாவிட் டபுரம் கந்தசுவாமி ஆலயத் துக்கு சென்று வழிபட்டார்.

நேற்று முற்பகல் 10.30 மணி யளவில் பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ நல்லூர் கந்தசுவாமி ஆல யத்தில் வழிபடுவார் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது. இந்த நேரத்தில் அங்கு எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுப் பதற்கு பொதுவில் தொடக் கம் பருத்தித்துறை வரையான இயக்கம் அழைப்பு விடுத்தி ருந்தது.

இதையடுத்து, நேற்று அதி காலை முதல் அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டி ருந்தது. அத்துடன், நல்லூர் ஆலயப் பகுதியில் போக்குவரத் துக்களும் முற்றாகத் தடை செய்யப்பட்டு மாற்றுவீதியால் திருப்பிவிடப்பட்டன.

எனினும், பின்னர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பிரத மர் மஹிந்த ராஜபக்ஷ வழி பாடு செய்யவில்லை. இதைத் தொடர்ந்து நேற்று நண்பகலின் பின்னர் அந்தப் பகுதியில் பாது காப்புக்கு நின்றிருந்த பொலிஸா ரும் படையினரும் அங்கிருந்து விலகிச் சென்றனர். (ஐ- 3)

## குருதிக் கொடை முகாம்!

யாழ்ப்பாணம், மார்ச் 21

மருத்துவமனைகளில் அவ சர சிகிச்சைகளுக்குக் குருதிக்கு நிலவும் தட்டுப்பாட்டைக் கருத் தில் கொண்டு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் குருதிக் கொடை முகாம்களைப் பல் வேறு இடங்களிலும் ஏற்பாடு செய்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் சனிக்கிழமை கோண் டாவிலில் குருதிக்கொடை முகாமை ஒழுங்குபடுத்தியது.

கோண்டாவில் தில்லை யம்பதி சிவகாமி அம்பாள் திரு மண மண்டபத்தில் இடம் பெற்ற இந்தக் குருதிக்கொடை முகாமில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியைச் சேர்ந்த மருத் துவர் கி.ஸ்ரீ. பாஸ்கரன் தலை மையிலான குழுவினர் கலந்து கொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டு இருந்தனர்.

குருதிக்கொடை முகாமில் பங்கேற்ற அனைவருக்கும் தமிழ்த்தேசியப் பசுமை இயக் கம் வழமை போன்று செவ் விரத்தம் பூச்செடிகளை வழங்கி வைத்தது. (ஐ)



## பிரதமரின் பதாதைகளை எரித்து எதிர்ப்பு போராட்டம்!

தென்மராட்சி, மார்ச் 21


பிரதமரை வரவேற்கக் கட் டப்பட்டிருந்த பதாதைகளை காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவுகள் எரித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இரு நாள் பயணமாக யாழ்ப்பாணம் வந்துள்ள பிர தமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று பொருளாதார மத்திய நிலையத்தைத் திறந்து வைப்ப தற்காக மட்டுவிலுக்கு வந்தி ருந்தார்.

அவரின் வருகையை எதிர்த்து போராட்டம் நடத் துவதற்காக காணாமல் ஆக் கப்பட்டவர்களின் உறவினர் கள் நேற்று போராட்டத்தை முன்னெடுக்க முயன்றனர். ஆனால், அவர்களை பொரு ளாதார மத்திய நிலையப் பகு திக்கு செல்ல விடாமல் வண் ணாத்திப் பாலம் அருகே பொலி ஸார் தடுத்து நிறுத்தினர்.

எனினும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்து சென்ற பின்னர் போராட்டக்காரர் களை அங்கு செல்ல பொலி ஸார் அனுமதித்தனர். இந்த நிலையில், அங்கு சென்ற போராட்டக்காரர்கள் பிரத மரை வரவேற்கக் கட்டப்பட் டிருந்த பதாதைகளை அறுத்த போராட்டக்காரர்கள் அவற்றை தீமூட்டி எரித்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (ஐ-3)









# தமிழ்ச் சங்கத்தின் முப்பெரும் நிகழ்வுகள் யாழ். பல்கலையில் சிறப்புற இடம்பெற்றன

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்திய "சங்கப்பேழை" நூல் வெளியீடு, உலகத் தாய்மொழி நாள் பேருரை மற்றும் 2019 உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்தில் அதிவிசேட சித்தி பெற்ற வட மாகாண மாணவர் கள் 154 பேருக்கான மதிப்ப ளிப்பு ஆகிய மூன்று நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

தமிழ்ச்சங்கத்தின் பெருந் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறீசற் குணராசா கலந்து கொண்டார்.

நிகழ்வில் வரவேற்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனும் தமிழ் மொழிநாள் பேருரையை கிழக் குப் பல்கலைக்கழக மொழித் துறைத் தலைவர் பேராசிரியர் சி. சந்திரசேகரமும் அவருக்கான அறிமுகவுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பொருளாளர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் சங்கப்பேழை நூல் வெளியீட்டு ரையை நூலின் பதிப்பாசிரியர் லோ. துசிகரனும் நூலாய்வு ரையை பேராதனைப் பல் கலைக்கழக வாழ்நாள் பேராசி ரியர் வ.மகேஸ்வரனும் ஆற்றி னர். நன்றியுரையை சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் கு. பாலசண்முகனும் நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தலை சங்கச் செயலாளர் இ. சர்வேஸ்வ ராவும் மேற்கொண்டனர்.

சங்கப்பேழை நூலை தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை துணைவேந்தர் பேரா சிரியர் சி. சிறீசற்குணராசா பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் மாகாண மற்றும் வலயங்களின் தமிழ்ப்பாட உத விக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் தமிழா சிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கௌரவம் பெற்ற மாண வர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் பணப்பரிசில், ஐந்து பெறுமதி யான புத்தகங்கள் அடங்கிய பொதி மற்றும் சான்றிதழ் என்பன வழங்கப்பட்டன. (ஐ)

# சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்க மாட்டோம்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



**யாழ்ப்பாணம், மார்ச் 21**

**சர்வகட்சி மாநாட்டால் தமிழ் மக்களுக்கு நன்மை எதுவும் கிடைக்கப்போவதில்லை. எனவே அந்த மாநாட்டில் பங்கேற்க மாட்டோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பது குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கருத்து தொடர்பில் அவரிடம் கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிப்பொறுப்பைக் கையிலெடுத்து இரண்டு ஆண்டுகளாகின்றபோதும் தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் கலந்துரையாடுவதற்கே தயக்கம் காண்பிக்கின்றார்கள். அதுமட்டுமன்றி நாட்டில் இனப்பிரச்னையே இல்லையென்று கூறியும் வருகின்றார். இதனைவிடவும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் தமது அன்புக்குரியவர் ணகளை தேடி போராட்டங்களைச் செய்து வருகின்ற நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் தருவதாக கூறி மக்களின் வேதனையுடன் விளையாடுகின்றார்கள்.

இதேபோன்று பயங்கரவாத தடைச் சட்டத்தைத் திருத்துவதாகக் கூறினாலும், நீண்ட காலத்துக்கு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாது தடுத்து வைத்தல் உள்ளிட்ட முக்கியமான விடயங்களை கைவிடுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. வெறுமனே கண்துடைப்புக்கான செயல்பாடாகவே பயங்கரவாத சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முயற்சின்றனர்.

இதேநேரம், இனப்படுகொலையையும், மனித உரிமைகள், மனிதாபிமான சட்ட மீறல்களையும் புரிந்துள்ள ராஜபக்ஷ அரசாங்கம் அவற்றுக்கான பொறுப்புக்கூறலைச் செய்வதற்கு தயாராக இல்லை. அண்மைய நாட்களில் அரசாங்கம் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அரசாங்கம் மீது அனைத்து இன மக்களும் வெறுப்பையே வெளிப்படுத்தியுள்ளனர்.

இத்தகைய தருணத்தில் நாம் மாநாட்டில் பங்கேற்பதானது வீழ்ச்சி கண்டிருக்கும் ராஜபக்ஷ குடும்பத்துக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்கு நிகரானதாக மாறிவிடும். ஆகவே, இவ்விதமான பினனணிகளைக் கொண்டவர்கள் கூட்டும் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பதில் தமிழ் மக்களுக்கு எவ்வதமான நன்மைகளும் கிடைக்கப் போதில்லை - என்றார். (ஐ)

*மாணவர்கள் கடத்தப்படவில்லை!*

# போதை பாவனையாலேயே வீட்டுக்கு திரும்பவில்லை!

### புதுக்குடியிருப்பு பொலிஸார் விளக்கம்!

*முல்லைத்தீவு, மார்ச் 21*

புதுக்குடியிருப்பில் மாணவர்கள் கடத்தப்படவில்லை என் றும், அவர்கள் பொய்கூறி விட்டு போதைப் பொருள் பயன்படுத்தியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை நேர வகுப்புக்கு செல்வதாகக் கூறிச் சென்ற மாணவர்கள் புதுமாத்தளன் கடற்கரைக்குச் சென்றுள்ளனர். அங்கு போதைப் பொருள் பயன்படுத்தரிய அவர்கள் வீதியில் விழுந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் தலைமையிலான குழுவினர் விசாரணை நடத்தினர்.

இதில், மாணவர்கள் பெற்றோருக்கு ஒரு தகவலை வழங்கிட்டு மாலைநேர கல்விக்கு செல்லவில்லை. இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை புத்தக பையுடன் சில மாணவர்கள் புதுமாத்தளன் கடற்கரையில் உலாவுகின்றனர் என்று பிரதேச வட்டார தகவல்கள் தெரிவித்தன. மாணவர்கள் கடத்தப்பட்ட செய்தி உண்மைக்கு புறம்பானது - என்றார்.

அத்துடன், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அதிகளவான மாணவர்கள் போதைக்கு அடிமையாகி வருகின்றார்கள். இது தொடர்பில் சமூக அக்கறையாளர்களுக்கு பலரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இருந்தும் பெற்றோர்களான நீங்கள் உங்கள் பிள்ளைகளை கண்டிப்பாகவும் கண்காணிப்புடனும் வளர்த்தெடுப்பது காலத்தின் கட்டாய தேவை யாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# 5,885 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் வவுனியாவில் சிறுபோக செய்கை!

*வவுனியா, மார்ச் 21*

வவுனியா மாவட்டத்தில் இம்முறை 5ஆயிரத்து 885 ஹெக்ரெயரில் சிறுபோக நெல் செய்கையை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது வரை 2,000 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் நெல் பயிர்ச் செய்கை இடம்பெற்று வருகின்றது.

பெரும்போக நெற்செய்கையின் போது இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டமையால் விளைச்சல் வெகுவாகக் குறைவடைந்தது. இதனால், விவசாயிகளுக்கு நட்டம் ஏற்பட்டது. இந்த நிலையிலேயே மீண்டும் சிறுபோக பயிர்ச் செய்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சேதன பசளையை பயன்படுத்தி சிறுபோக செயல்பாடுகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ள நிலையில், கமநல சேவை நிலையங்கள் ஊடாக சேதன பசளைகள் உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று அரசு தெரிவித்திருந்தது.

இருந்த போதும் கமநலவ சேவை நிலையங்களுக்குத் தேவையான சேதன பசளைகள் உரிய முறையில் கிடைக்கப் பெறாத நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக சேதன பசளைகளை உரிய நேரத்தில் விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. (ஐ)



# இலங்கையரின் படகு தமிழ்நாட்டில ஒதுங்கியது!

*இராமேஸ்வரம், மார்ச் 21*

இலங்கையர் ஒருவருக்கு சொந்தமானது என்று சந்தேக்கிக்கப்படும் படகு தமிழ்நாட்டில் கரையொதுங்கியுள்ளது. வேதாரண்யம் அருகே கோடியக்கரை - காத்தான்ஓடை என்ற இடத்திலேயே இந்தப் படகு கரையொதுங்கியுள்ளது.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட OFRP-A-0851 KCH என்ற இலக்கத்தையுடைய கண்ணாடி இழைப் படகே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது.

இந்தப் படகு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த படகா அல்லது கடத்தல் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் படகா, இதில் யாரும் வந்தனரா என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. சுங்கத்துறை அதிகாரிகள், கியூ பிராஞ்ச் பொலிஸார் மற்றும் கடலோரப் பாதுகாப்பு குழுவினர் இந்த விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ- 2)

# மக்கள் பிரச்னையை கேட்காமல் பிரதமர் இரகசியமாக நடமாட்டம்!

### ஜே. வி. பி. குற்றச்சாட்டு

*யாழ்ப்பாணம், மார்ச் 21*

"யாழ்ப்பாணம் வந்த பிரதமர் மக்களின் பிரச்னைகளை கேட்காமல், இரகசியமான முறையில் ஒவ்வொரு இடங்களுக்கும் சென்று வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இவர்களால் மக்களுக்கு முகம் கொடுக்க முடியாது" என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இ. சந்திரசேகரன் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நுற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தற்போது எல்லாவற்றுக்குமே வரிசையில் நிற்க வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது. பால்மா மற்றும் எரிவாயு சிலிண்டர், எரிபொருட்களை பெறுவதில் பெரும் பிரச்னை காணப்படுகின்றன. கல்வித்துறையில் வினாத்தாள்களை பெற்றுக் கொள்வதற்குக்கூட வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த நெருக்கடி மேலும் மோசமடைய கூடிய வாய்ப்பை காணப்படுகின்றது இந்த ஆட்சியை முற்றுமுழுதாக நிராகரிக்கின்றோம். முழு நாட்டு மக்களும் அரசாங்கத்துக்கு எதிராக அணிதிரண்டு உள்ளார்கள். ஜனாதிபதியின் உரை என்பது பழைய குருடி கதவை திறவடி என்பது போன்று பழைய புராணங்களை பாடும் ஒன்றாகவே காணப்பட்டது. ஆட்சியாளர்கள் பிரச்னைகளை தாங்கள் தீர்க்க முடியாது போகும் போது கடந்த கால ஆட்சியாளர்கள்மீது குற்றம் சுமத்தும் நிலையே காணப் டுகிறது.

கோட்டாபய ராஜபக்ஷவின் உரையும் முன்னைய அரசாங்கங்களை குற்றம் சாட்டுவதாகவே காணப்படுகிறது.




மக்கள் நெருக்கடியில் தவிக்கின்ற போது அமைச்சர்களோ சொகுசு வாழ்க்கையிலும் நீர் விளையாட்டுகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். எமது நாட்டை இந்தியாவுக்கு தாரை வார்த்துக் கொடுத்ததன் மூலம் 100 கோடி அமெரிக்க டொலர் கிடைத்திருக்கின்றது.

யாழ்ப்பாணம் வந்த பிரதமர் மக்கள் பிரச்னைகளை கேட்காமல், இரகசியமான முறையில் ஒவ்வொரு இடங்களுக்கும் சென்று வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இவர்களால் மக்களுக்கு முகம் கொடுக்க முடியாது -என்றார். (ஐ)

# எரிபொருளுக்காக காத்திருந்த மற்றுமொருவர் நேற்று மரணம்!

*கொழும்பு, மார்ச் 21*

எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்த மற்றுமொருவர் உயிரிழந்தார்.

கொழும்பு - கடவத்தையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று நீண்ட வரிசையில் காத்திருந்த 70 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் கண்டியில் எரிபொருளை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருந்த 71 வயதான முதியவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## சிவன் ஆலய அன்னதானத்துக்கு சந்நிதியான் ஆச்சிரமம் நிதியுதவி!

வடமராட்சி மார்ச் 21

சந்நிதியான் ஆச்சிரமத்தால் அச்செழு வடக்கு வல்லியப்பா சிவன் ஆலயத்துக்கு 25 ஆயிரம் ரூபாய் நிதியும் அன்னதானத்துக்கான உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிதி மற்றும் அன்னதானத்திற்க்கான உணவு பொருட்களை வடமராட்சி சந்நிதியான் ஆச்சிரம இயக்குநர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து அச்செழு வள்ளியப்பா சிவன் ஆலய நிர்வாகத்தினரிடம் வழங்கினார். (ஐ-2)

## நீரில் மூழ்கி ஒருவர் பலி: ஒருவரை காணவில்லை!

கொழும்பு, மார்ச் 21

கம்பஹா - உஸ்வெட்டகெயியாவ கடலில் குளிப்பதற்காக சென்ற இருவரில் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்ததுடன் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று பமுனுகமை பொலிஸார் தெரிவித்தனர். நுவரெலியா, பொகவந்தலாவை பிரதேசத்தை சேர்ந்த 26 வயது இளைஞரே உயிரிழந்தார். அதே பிரதேசத்தை சேர்ந்த 32 வயது நபர் காணாமல் போயுள் ளார்.

குறித்த இருவரும் நேற்று குளிப்பதற்காக கடலுக்கு சென்றுள்ள நிலையிலேயே இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. காணாமல் போனவரை மீட்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

## 3500 தொன் எரிவாயு இன்று வருகின்றது!

### லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

3,500 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பல் ஒன்று இன்று திங்கட்கிழமை நாட்டை வந்தடையவுள்ளது. இந்த நிலையில் இந்தக் கப்பலுக்கான கட்டணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த கப்பல் மாலைத்தீவில் இருந்து நாட்டை வந்தடையவுள்ளது. கடந்த 17ஆம் திகதி நாட் டுக்கு கொண்டுவரப்பட்ட 3,500 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பலுக்கு கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் அதனை தரையிறக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதில், இதுவரை ஆயிரம் மெற்றிக்தொன் எரிவாயு விநியோகிக்கப்பட்டுள்ளது. லிட்ரோ நிறுவனத்தால் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு இலட்சத்து 20 ஆயிரம் எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டன.

அத்துடன், நேற்றும் இன்றும் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக லிட்ரோ நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (ஐ)

## சர்வதேச பொலிஸின் தலைவர் அமைச்சர் வீரசேகரவுடன் பேச்சு

கொழும்பு, மார்ச் 20

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கும் சர்வதேச பொலிஸின் தலைவர் கலாநிதி அஹமட் நாசர் அல் ரைஸூக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் டுபாயில் இடம்பெற்றது.

இதன்போது குற்றம், பயங்கரவாதத்தை தடுப்பது மற்றும் சட்டஅமுலாக்கத்தை மேம்படுத்துவது குறித்த விவாதிக்கப்பட்டதாக அமைச்சின் ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தலிபான்கள் 2021ஆம் ஆண்டு 15ஆம் திகதி ஆப்கானிஸ்தானின் அதிகாரத்தை கைப்பற்றியதன் பின்னர் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் சரத் வீரசேகர இதன்போது சுட்டிக்காட் டினார்.

இதற்கு பதிலளித்த சர்வதேச பொலிஸின் தலைவர் அஹமட் நாசர் அல் ரைஸ், போதைப் பொருள் மற்றும் ஆயுதக்கடத்தலை கட்டுப்படுத்துவதற்கு கூட்டுப் பணிக்குழுவொன்றை அமைப்பது அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

நாடுகடந்த குற்றங்களின் இணைய அச்சுறுத்தல்களை தடுப்பதற்கு சர்வதேசத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு இலங்கை ஆர்வமாக உள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். இலங்கை பொலிஸாரின் இணைய நடவடிக்கைகளை மேம்படுத்துதல், பயங்கரவாத மற்றும் தீவிரவாத அச்சுறுத்தல் களை கண்டறிதல், சட்டத்தை அமுல்படுத்துவதில் ஒத்துழைத்தல் மற்றும் இணைய குற்றங்களை தடுப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (கே)

### காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளுக்கு

# மனிதாபிமான அடிப்படையிலேயே ஒரு இலட்சம் ரூபாய் வழங்குகிறோம்!

### நீதி அமைச்சர் அலி சப்ரி சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 21

**“காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக மனிதாபிமான அடிப்படையிலேயே ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவதற்கு தீர்மானித்து அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. இதனை உயிர்களின் விலையாகக் கொள்ள வேண்டியதில்லை. உறவுகளின் உணர்வுகளை கொச்சப்படுத்தும் நோக்கம் எமக்கு இல்லை”, என்று நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.**

கடந்த அமைச்சரவை கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். அத்துடன், தமக்கு நீதியே வேண்டும் என்றும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையிலேயே மேற்கண்டவாறு நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. அதுவொரு சுயாதீனமான



கட்டமைப்பாகும். அந்த அலுவலகத்தின் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அடுத்தகட்டச் செயல்பாடுகள் குறித்து கரிசனை கொள்ளப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் சான்றாதாரங்கள் காணப்படுமாயின் அதனை குறித்த அலுவலகத்திடத்தில் வெளிப்படுத்தி அதன் ஊடாக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். குறிப்பாக சட்டமா அதிபர் ஊடாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சட்ட ஏற்பாடுகள் உள்ளன.

நீதி அமைச்சு என்ற வகையில் சுயாதீனக் கட்டமைப்பான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகத்திற்கான நிர்வாகம் உள்ளிட்ட விடயங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட வசதிகளை வழங்கி வருகின்றோம்.

இதேநேரம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். அந்த வகையில் அவர்களுக்கு தொழில் பயிற்சி, சுயதொழில் ஆரம்பம் உள்ளிட்ட பயிற்சிகளை வழங்கி தொழில் புரிவேராக உருவெடுப்பத்கு உதவிகளை வழங்குகின்றோம்.

தற்போதைய நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான நடவடிக்கையாக அவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவதற்கு தீர்மானக்கப்பட்டுள்ளது.

எனினும், இது அவர்களுக்கான தற்காலிக நிவாரணமே. மாறாக அவர்களின் போராட்டத்தை மலினப்படுத்தும் செயல்பாடல்ல. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் மனிதர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் சொந்தங்கள் படுகின்ற வேதனைகளை நான் நன்கு அறிவேன். அவர்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்த வில்லை.

அதேநேரம், அவர்களை இந்தப் பணத்தை பெற்றுக் கொள்ளுமாறும் அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை - என்றார். (ஐ)

## ரஞ்சன் ராமநாயக்க வைத்தியசாலையில்!

கொழும்பு, மார்ச் 21

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

இவர் நேற்று காலை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் எலும்பியல் சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டாரென சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## விலைக் கட்டுப்பாடு என்பது கொள்கையளவிலேயே உள்ளது!

கொழும்பு, மார்ச் 21

நாட்டில் தற்போது எந்தப் பொருட்களுக்கும் கட்டுப்பாட்டு விலை என்ற ஒன்று இல்லை. கட்டுப்பாட்டு விலை என்பது கொள்கை அளவில் மட்டுமே இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். இதன் போது தொடர்ந்துரைத்த அவர்,

அரசாங்கமானது வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு மருந்துப்பொருட்களின் விலையை நூற்றுக்கு 29 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. உண்மையை கூறினால் இந்த நாட்டில் கட்டுப்பாட்டு விலை என்பது கொள்கையளவில் மட்டுமே உள்ளது.

மருந்தகங்களுக்கு சென்றால் அங்கு மருந்துகளுக்கென கட்டுப்பாட்டு விலை இல்லை. ஒவ்வொரு மருந்தகங்களும் தங்களுக்கு ஏற்றால்போல மருந்துகளை விற்பனை செய்கின்றன.

இது தொடர்பில் மேற்பார்வை செய்வதற்கு ஒருவரும் இல்லை. நல்லாட்சி அரசாங்கத்தில், விலை கட்டுப்பாட்டை நிர்ணயித்ததன் பின்னர் உணவு மற்றும் ஔடதங்களுக்கான பரிசோதகர்களை அழைத்து நாடளாவிய ரீதியில் சோதனைகளை மேற்கொண்டோம்.

நாளுக்கு நாள் பொருட்களின் விலை அதிகரித்து செல்கின்றது. வியாபாரிகளுக்கு ஏற்றவாறு பொருட்களின் விலையை அதிகரிக்கப்படுகின்றன. நாட்டு மக்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஜனாதிபதி முகம்கொடுத்துள்ளார். நாட்டின் ஜனாதிபதி ஒருவர் மக்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் உட்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்- என்றார். (கே)

# செப்ரெம்பர் ஜெனீவா சந்திப்பின் பின்னர் அடுத்த நகர்வு என்ன?

■ பனங்காட்டான்

உலகின் முதலாவது பெண் பிரதமர் என்று பெயர் பெற்ற சிறிமாவோ பண்டாரநாயக்க, 1970ம் ஆண்டு இலங்கைப் பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றி சாதனை படைத்தவர்.

இலங்கை என்பதை சிறீலங்கா என்று பெயர் மாற்றி சிங்களவர்களை மகிழ்ச்சிப் படுத்திய இவரை, 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் அவர்களே தலைகுப்புற வீழ்த்தி ஆறு ஆசனங்களை மட்டும் வழங்கினர்.

1978ஆம் ஆண்டுத் தேர்தலில் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன சிறிமாவோவின் குடியுரிமையை ஏழு ஆண்டுகளுக்கு இரத்துச் செய்து மீண்டும் அவரை குசினிக்குள் முடக்கினார். இவ்வேளையில் கொழும்பிலிருந்து வெளிவந்த தவச என்ற சிங்களப் பத்திரிகைக்கு சிறிமாவோ அளித்த செவ்வியில் குறிப்பிட்ட ஒரு விடயம் எக்காலத்திலும் அரசியல் தலைமைகளுக்குப் பொருத்தமானது.

பிரதமர் கதிரையில் ஏழாண்டுகள் தாம் இருந்தபோது, தம்மைச் சுற்றி இருந்தவர்கள் நாட்டினதும் மக்களினதும் உண்மை நிலையை தமக்கு மறைத்து பொய்யுரைத்தமையை தேர்தல் தோல்வியின் பின்னரே தம்மால் தெரிந்து கொள்ள முடிந்ததாக சுட்டியிருந்தார்.

தற்போது, ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சி இரண்டரை ஆண்டுகளுக்குள் அல்லோலகல்லோலப்படுவதற்கும், மக்கள் எதிர்ப்பு பேரெழுச்சியாகி நாடு தழுவிய ரீதியில் நாளாந்தம் அதிகரித்துச் செல்வதற்கும் சிறிமாவோ அன்று சொன்னதே காரணம் என்பதை விளக்க வேண்டியதில்லை.

காணாமலாக்கப்பட்டவர்களுக்காக அவர்களின் உறவுகள் ஆண்டுக்கணக்கில் நடத்தி வரும் போராட்டமே இன்றைய அனைத்துப் போராட்டங்களுக்கும் தாயானது. சிங்கள தேசத்தில் நாளாந்தம் எல்லாவற்றுக்கும் போராட்டமாகி விட்டது. இந்த மாதம் 15ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற பிரமாண்டமான பேரணி ராஜபக்ஷக்களை உலுப்பிவிட்டது.

இலங்கை என்றால் கடன்படுநாடு என்ற பட்டத்துக்குள்ளாகி விட்டது. மக்கள் பட்டினியால் வாடும் நிலை வந்துவிட்டது. அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்குக்கூட அரசாங்கத்திடம் டொலர்கள் இல்லாமலாகி விட்டது.

"குடும்பத்தின் இரவு உணவு மேசையில் அரசியல் தீர்மானங்களை எடுப்பதே நாட்டின் இன்றைய சீர்கேட்டுக்குக் காரணம்" என்று பாராளுமன்ற உறுப்பினராகவிருக்கும் அத்தரலிய ரத்ன தேரர் பகிரங்கமாகக் கூறியிருப்பது யதார்த்தமானது.

ராஜபக்ஷ சகோதரர்களும் அவர்களது பிள்ளைகளும் தங்கள் வீட்டுக்குள்ளேயே அரசியல் முடிவுகளை எடுக்கின்றனர். அமைச்சரவைத் தீர்மானம் என்பது உண்மையல்ல என்பதுவே தேரர் இங்கு குறிப்பிடும் மறைபொருள்.

தேரர் தலைமை தாங்கிய ஜாதிக ஹெல உறுமய கட்சி வழங்கிய ஆதரவினாலேயே, 2005ல் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்து மகிந்த ஜனாதிபதியானார் என்பதுவும், 2015இல் இவரது கட்சி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கியதாலேயே மகிந்த தோற்கடிக்கப்பட்டார் என்பதுவும் நிகழ்கால வரலாறு.




இலங்கைத் தமிழரின் அரசியல் அபிலாசைகள், பதின்மூன்றாவது திருத்த அமுலாக்கல் பற்றி மறந்தும்கூட மோடி ஒரு வார்த்தையும் பேசவில்லை. வடபகுதி மீனவர்களுக்கு இந்தியாவிடமிருந்து இப்போது உலர் உணவுப்பொதி மட்டுமே.

இப்போது ஒரு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமானால், 69 லட்சம் சிங்கள மக்களின் அரைப்பங்கு வாக்குகளைக்கூட ராஜபக்ஷக்கள் பெற முடியாதென்பதை அரச புலனாய்வுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அந்தக் கதிரையில் இருக்கும்வரை (சிறிமாவோ சொன்னதுபோல) முழு உண்மையை கோட்டாபயவுக்குச் சொல்ல எவரும் முன்வர மாட்டார்கள்.

இந்தப் பின்னணியிலேயே இன்றைய அரச இயந்திரம் ஓடிக் கொண்டிருக்கிறது. சீனாவும் இந்தியாவும் இல்லையென்றால் இலங்கை தனக்குத் தானே தூக்குப் போட்டு இறந்திருக்கும். ஒரு வகையில் பார்ப்பதானால் ஒரு நாட்டின் கடனுக்கான வட்டியைச் செலுத்த இன்னொரு நாட்டிடம் காமதேனுவான நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிச்சா பாத்திரம் ஏந்துகிறார்.

அயல் நாடே முக்கியம், அதனால் இந்தியா உதவுகிறது என்று கூறிக் கொண்டு 100 பில்லியன் டாலரை கடன் பிணையாக இலங்கைக்கு இந்தியா இந்த வாரம் வழங்கியுள்ளது. இது தொடர்பாக பிரதமர் மோடியும், பஸில் ராஜபக்ஷவும் நடத்திய கலந்துரையாடலில் இலங்கையின் விவசாயம், மீன்பிடித்துறை, சக்திவளம் உட்பட ஐந்து அம்சங்கள் குறிப்பிடப்பட்டன.

ஆனால், இலங்கைத் தமிழரின் அரசியல் அபிலாசைகள், பதின்மூன்றாவது திருத்த அமுலாக்கல் பற்றி மறந்தும்கூட மோடி ஒரு வார்த்தையும் பேசவில்லை. வடபகுதி மீனவர்களுக்கு இந்தியாவிடமிருந்து இப்போது உலர் உணவுப் பொதி மட்டுமே. இதற்குப் பெயர் - தக்க தருணத்தில் உதவும் நட்பு என்று இந்தியத் துணைத் தூதுவர் ரகீஸ் நடராஜன் கூறியுள்ளார்.

போரினால் அழிக்கப்பட்ட தமிழ் மண்ணை மீட்கவும், காக்கவும், தங்கள் பிறப்புரிமைக்காகவும் தமிழினம் போராடிக் கொண்டிருக்க, நட்பு நாடு சிங்கள தேசத்தை நோக்கி நேசக்கரம் நீட்டுகிறது. ஈழத்தமிழரின் தலைமையும் இதே போக்கில்தான் அரசியல் செய்கிறது. மோடியின் அழைப்பை நிராகரித்த இவர்கள் கோட்டாபயவைச் சந்திப்பதற்கு காத்திருந்தார்கள். அதற்காக தீர்மானிக்கப்பட்ட இந்த மாதம் 15ம் திகதி கானல் நீராகிவிட்டது.

அன்றைய தினம் ஜனாதிபதி செயலகத்தை சஜித் பிரேமதாசவின் எதிரணி முற்றுகையிடுமென்று தெரிந்திருந்தும், அந்த நாளையே கூட்டமைப்பை சந்திப்பதற்கு கோட்டாபாய தெரிந்தெடுத்தது நாடகத்தின் உச்சம். இது இப்படித்தான் போகுமென்று தெரிந்து கொண்டும் அந்த நாடகத்தில் பங்கேற்றது சம்பந்தன் அணியின் அபார நடிப்பு.

ஜெனிவாவின் 46:1 தீர்மானத்தின் இரண்டாம் கட்டம் தாண்டி, மூன்றாவதும் இறுதிக் கட்டமுமான 51வது அமர்வு எதிர்வரும் செப்டம்பரில் இடம் பெறவுள்ளது. அடுத்தது ஐ.நா. பொதுச்சபையா அல்லது பாதுகாப்புச் சபையா என்ற கேள்வி தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கையில், இராணுவ மயமாக்கலை மறைக்கவும், ஜெனிவாவை ஏமாற்றவும் கோட்டாபய தரப்பு அவசரம் அவசரமாக இரண்டு சந்திப்புகளை அறிவித்தது.

முதலாவது 15ஆம் திகதி கூட்டமைப்பின் சந்திப்பு (ரெலோ இதனை நிராகரித்துள்ளதால் தமிழரசு மற்றும் புளொட்டின் சந்திப்பு என்பதே சரி). அடுத்தது 23ஆம் திகதிய சர்வகட்சி மாநாடு.

15ஆம் திகதிய சந்திப்பு நடத்திய பின்னர் சர்வகட்சி மாநாடு நடத்தினால் மட்டுமே, தமிழர் தரப்பு முன்வைக்கும் யோசனைகளை அல்லது கோரிக்கைகளை சர்வகட்சி மாநாட்டில் ஆராய முடியும். ஆனால் தமிழர் தரப்பின் சந்திப்பை 25ஆம் திகதிக்குப் பின் போட்டுவிட்டு, சர்வகட்சி மாநாட்டை அதற்கு இரண்டு நாட்கள் முன்னராக - 23ஆம் திகதி நடத்துவதால் என்ன பயன்? சிலவேளைகளில் இதனையே காரணமாகக் கூறி சர்வகட்சி மாநாட்டை 25ம் திகதிக்குப் பின்னர் நடத்தும் யோசனையையும் கோட்டாபய நிர்வாகம் இரகசியமாக வைத்திருக்கக் கூடும். இல்லையென்றால் இதுவும் இன்னொரு நாடகமாகலாம்.

மறுதரப்பில், எதிரணியின் பேரணி பாரிய வெற்றியை பெற்றிருப்பதால், விரும்பியோ விரும்பாமலோ நாட்டு மக்களுக்கு உரையாற்ற வேண்டிய அவசியம் கோதபாயவுக்கு ஏற்பட்டது.

இன்றைய மோசமான பொருளாதார நெருக்கடிக்கு தமது அரசு எந்த வகையிலும் பொறுப்பில்லை என்றவாறு தமது உரையை ஆரம்பித்த இவர், கொரோனா பேரிடரை முன்னிறுத்தி, அதனிலும் மேலாக தங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட உலகளாவிய காரணங்களாலேயே பாரிய பொருளாதார நெருக்கடி தொடர்வதாக தெரிவித்துவிட்டு, தமது போர்க்கால தலைமைத்துவ சாதனையையும் வெற்றியையும் கோடி காட்டியிருந்தார்.

கொடூரமான பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தை நிர்வகிக்க தம்மால் முடிந்தமையே தமக்கான தகுதியாக குறிப்பிட்ட கோட்டாபய, தம்மீது நம்பிக்கை வைக்குமாறு மீண்டும் மீண்டும் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதே விடயத்தில், கூட்டமைப்பின் தலைவராக விளங்கும் சம்பந்தனின் அண்மைக்கால வாக்குமூலமொன்று, இனப்படுகொலைக்கு நியாயம் கேட்டுப் போராடும் ஈழத்தமிழினத்தின் தீவிர பார்வைக்கு உட்பட்டுள்ளது:

"முள்ளிவாய்க்காலில் அரச பயங்கரவாதத்தால் தமிழினம் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்தபோது இதனை இந்தியா மற்றும் அமெரிக்க நாடுகளின் கவனத்துக்கு நான் எடுத்துச் சென்று தடுக்குமாறு கேட்டேன். போர் முடியும்வரை மௌனமாக இருங்கள். அதன்பின்னர் தமிழரின் அரசியல் தீர்வுக்கு வழி வகுப்போம் என்று இரு நாடுகளும் எனக்கு வாக்குறுதி அளித்தன. அதனை நம்பி பன்னிரண்டு வருடங்களாகக் காத்திருந்த என்னை இரு நாடுகளும் ஏமாற்றி விட்டன" என்பதுவே சம்பந்தனின் வாக்குமூலம்.

அண்மையில் தம்மைச் சந்தித்த இந்தியத் தலைவர்களிடமும், இந்த மாதம் கொழும்பில் சந்தித்த அமெரிக்காவின் புதிய தூதுவரிடமும் சம்பந்தன் இதனை எடுத்துக்கூறி தம்மைத் தாமே நொந்து கொண்டார்.

சம்பந்தன் உண்மையே கூறுவார் என்ற நம்பிக்கையில் அவரது வாக்குமூலத்தை உண்மையாகவே ஏற்றுக் கொள்வோமானால்...

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைக்கு சம்பந்தனும் சம்பந்தியாகியுள்ளார். எனவே, இதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு மட்டுமன்றி சம்பந்தனுக்கும் உண்டு. கோட்டபயவும், இலங்கை அரசாங்கமும், சம்பந்தனும் இவ்விடயத்தில் ஒரே தராசில் நிற்பவர்களே. ■



# உக்ரைன் அகதிகளை ஏன் அமெரிக்கா ஏற்கவில்லை?

ரஷ்யா போரைத் தொடங்கியபோது, ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் 514 உக்ரைன் அகதிகளை மட்டுமே அமெரிக்கா அனுமதித்தது என்று புள்ளிவிவரங்கள் காட்டுகிறது. உக்ரைனில் போர் தீவிரமடைந்து வெளியேறும் உக்ரைனியர்கள் எண்ணிக்கை உயர்ந்து வருவதால், மார்ச் 1-16-ம் தேதி வரை 7 உக்ரைன் அகதிகள் மட்டுமே அமெரிக்காவில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் தகவல்களின்படி, பெப்ரவரி 24ஆம் தேதி ரஷ்யா படையெடுத்ததில் இருந்து 3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உக்ரைனை விட்டு அண்டை நாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர். ஆனால், அமெரிக்கா இதுவரை சில நூறு உக்ரைன் அகதிகளை மட்டுமே அனுமதித்துள்ளது. சில விமர் சகர்கள் அமெரிக்க அரசின் கொள்கையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளனர்.

அமெரிக்கா ஏன் அதிக உக்ரைன் அகதிகளை ஏற்கவில்லை?

அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் அவருடைய உயர் அதிகாரிகளும், தேவைப்பட்டால் அகதிகளை ஏற்றுக்கொள்ள அமெரிக்கா தயாராக இருப்பதாகக் கூறியுள்ளனர். ஆனால், உக்ரைனியர்களின் முதன்மையான இடமாக ஐரோப்பா இருக்க வேண்டும் என்று நிர்வாகம் மீண்டும் மீண்டும் சமிக்ஞை செய்துள்ளது.

"உக்ரைனிய அகதிகள் இங்கு வந்தால், நாங்கள் அவர்களை இருகரம் நீட்டி வரவேற்கப் போகிறோம்" என்று பைடன் மார்ச் 11ம் தேதி பிலடெல்பியாவில் ஜனநாயகக் கட்சியினரின் கூட்டத்தில் கூறினார். துணை அதிபர் கமலா ஹாரிஸ், வெளியுறவு செயலாளர் ஆண்டனி பிளிங்கன் மற்றும் வெள்ளை மாளிகை செய்தித் துறை செயலாளர் ஜென் சாகி ஆகியோர் இதே போன்ற கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

"பெரும்பாலான அகதிகள், பல குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் முன்னாள் முதலாளிகள் அண்டை நாடுகளில் இருக்க விரும்புவார்கள் என்று நிர்வாகம் நம்புகிறது" என்று சாகி மார்ச் 10ம் தேதி கூறினார்.

"அமெரிக்காவில் மீள்குடியேற்றம் செய்வது என்பது விரைவான செயல் அல்ல என்பதை மனதில் கொண்டு, உக்ரைனிய அகதிகளுக்கு ஐரோப்பாவில் பாதுகாப்பு இல்லாத பட்சத்தில் அவர்களை அமெரிக்காவிற்கு அழைத்து வருவதற்கு ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து செயல்படுவோம்" என்று அமெரிக்க வெளியுறவுத்துறை கூறியுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம், அமெரிக்க ராணுவம் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறியதைத் தொடர்ந்து பைடன் நிர்வாகம் ஆப்கானிஸ்தானுக்கான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டாலும் அகதிகள் மீள்குடியேற்றம் செய்யப்படுவதற்கு பல ஆண்டுகள் ஆகலாம் என்று கூறியது.

அந்த அனுபவத்தின் படிப்பினைகள் மற்ற அகதிகளின் மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்த உதவும் என்று மூன்று அமெரிக்க அதிகாரிகள் ராய்ட்டர்ஸிடம் தெரிவித்தனர்.

அதிக அளவில் அகதிகள் அனுமதிப்பதற்கு அழைப்பு விடுப்பவர்கள் யார்?

மூன்று டஜன் ஜனநாயகக் கட்சி எம்.பி.க்கள் அடங்கிய குழு மார்ச் 11ம் தேதி எழுதிய கடிதத்தில் பைடனை அகதிகள் அனுமதிப்பதை அதிகரிக்கவும், அமெரிக்காவில் உள்ள குடும்ப உறுப்பினர்களுடன் உக்ரைனியர்களை மனிதாபிமான பரோல் எனப்படும் தற்காலிக பொறிமுறையின் மூலம் வேகமாக நுழைய அனுமதிக்கவும் வலியுறுத்தியது.

அவசர கால மருத்துவத்தில் பயிற்சி பெற்ற மருத்துவரும், கடிதத்தை எழுதிய காங்கிரஸின் ஹிஸ்பானிக் காகஸின் தலைவருமான பிரதிநிதி ரவுல் ரூயிஸ், ஜனநாயகக் கட்சியினர் மற்றும் குடியரசுக் கட்சியினர் குழுவின் ஒரு பகுதியாக இந்த மாத தொடக்கத்தில் போலந்து-உக்ரைன் எல்லைக்கு பயணம் செய்தார். "இந்த நெருக்கடி தற்போது உக்ரைனிய அகதிகளால் பல நாடுகள் நிரம்பி வழியக்கூடும். மேலும், போரிலிருந்து தப்பிக்கும் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு உதவி செய்யும் நாடுகளுக்கு உதவுவதற்கான முயற்சியில் அமெரிக்கா வழிநடத்த வேண்டும்" என்று அவர் பைடனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார்.

இந்தியானாவிலிருந்து குடியரசுக் கட்சி மற்றும் உக்ரைனிய குடியேறியவர்களின் பிரதிநிதி, விக்டோரியா ஸ்பார்ட்ஸ் இந்த தூதுக்குழுவில் இருந்தார். அவர் ஃபாக்ஸ் நியூஸிடம் கூறுகையில், மனிதாபிமான நடவடிக்கை அண்டை நாடான போலந்தின் பிரச்சினையாக மட்டும் இருக்க கூடாது என்று கூறினார்.

> **ஆயிரக்கணக்கான உக்ரேனியர்கள் மற்றும் ரஷ்யர்கள் புகலிடம் கோருவதற்காக அமெரிக்கா-மெக்சிகோ எல்லைக்கு பயணித்து வருகின்றனர். இது மனிதாபிமான நெருக்கடி மோசமடைந்து வருவதால் இது வேகமடையக் கூடும் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் இந்த மாத தொடக்கத்தில் தெரிவித்தது.**

நெருக்கடியின் அவசரத்தை உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியின் மனைவி ஒலேனா ஜெலென்ஸ்கா அடிக்கோடிட்டுக் காட்டினார். அவர் ஏபிசி நியூஸ் செய்தி நிறுவனத்திடம் கூறுகையில், உக்ரைனிய பெண்கள் மற்றும் தஞ்சம் கோரும் குழந்தைகளை ஆதரிக்க அமெரிக்கப் பெண்களை அழைப்பதாகக் கூறினார்.

இரண்டு டஜனுக்கு மேற்பட்ட யூத-அமெரிக்க அமைப்புகளின் கூட்டணி, கடந்த வாரம் பைடனை சந்தித்து உக்ரைனிய அகதிகளின் சேர்க்கையை அதிகரிக்கச் செய்தது. "அமெரிக்கா தனது கதவுகளை அகதிகளுக்கு மூடும்போது என்ன நடக்கும் என்பது எங்கள் சமூகத்திற்கு நன்றாகவே தெரியும்" என்று கூறினர்.

அமெரிக்க வெளியுறவுத் துறையின் தகவல்களின்படி, ரஷ்யா போரைத் தொடங்கியபோது, ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 514 உக்ரைனிய அகதிகளை மட்டுமே அமெரிக்கா அனுமதித்துள்ளது.

மார்ச் 1-16-ம் தேதி வரை அமெரிக்காவில் 7 உக்ரைனிய அகதிகள் மட்டுமே குடியமர்த்தப்பட்டுள்ளனர். அமெரிக்காவின் உள்நாட்டு புள்ளிவிவரங்களின் படி, போர் உக்கிரமடைந்தால் வெளியேறும் உக்ரைனியர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருக்கும் என்று ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரங்கலை நன்கு அறிந்த ஒருவர் கூறுகையில், பல உக்ரைனிய அகதி விண்ணப்பதாரர்கள் அமெரிக்காவிற்குப் பயணம் செய்ய அனுமதித்துள்ளனர். மோதல் தொடர்பான விமான இரத்துகளால் அவர்கள் நிறுத்தப்பட்டனர். இது மார்ச் மாதத்தில் அனுமதியை நிறுத்தப்படுவதற்கு வழிவகுத்தது என்று கூறினார்.

பைடன் இந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த அகதிகளின் உச்சவரம்பை 1,25,000-ஆக நிர்ணயித்தார். குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் டிரம்ப், தனது முன்னோடியான குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவரான 15,000 ஆகக் குறைத்ததை அடுத்து, அகதிகள் அனுமதிக்கப்படும் செயலை முடக்கியது. ஏற்கனவே, கோவிட்-19 தொற்றுநோயால் அகதிகள் அனுமதிக்கும் செயல்பாடுகளை தாமதப்படுத்த வழிவகுத்தது. பைடன் 1,25,000 அகதிகளில் 10,000 இடங்களை ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்களுக்காக ஒதுக்கியுள்ளார். இது உக்ரைனையும் உள்ளடக்கியது. ஆனால், தேவைப்பட்டால் அந்த ஒதுக்கீட்டை விரிவுபடுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோவிலிருந்து அமெரிக்காவிற்குள் நுழைய முயற்சிக்கும் உக்ரேனியர்களுக்கு என்ன நடக்கும்?

ஆயிரக்கணக்கான உக்ரேனியர்கள் மற்றும் ரஷ்யர்கள் புகலிடம் கோருவதற்காக அமெரிக்கா-மெக்சிகோ எல்லைக்கு பயணித்து வருகின்றனர். இது மனிதாபிமான நெருக்கடி மோசமடைந்து வருவதால் இது வேகமடையக்கூடும் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் இந்த மாத தொடக்கத்தில் தெரிவித்தது.

கடந்த அக்டோபரில் தொடங்கிய இந்த நிதியாண்டின் முதல் ஐந்து மாதங்களில், தென்மேற்கு எல்லையில் உள்ள அமெரிக்க அதிகாரிகள் சுமார் 1,300 உக்ரைனியர்களை எதிர்கொண்டனர். பெரும்பாலும் நுழைவுத் துறைமுகங்களில், கடந்த நிதியாண்டு முழுவதும் 680 பேர் இருந்தனர்.

பெரும்பாலான உக்ரைனியர்கள் தங்கள் குடியேற்ற நடவடிக்கைகளைத் தொடர அமெரிக்காவிற்குள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்ற நாடுகளில் இருந்து குடியேறுபவர்களைப் போலல்லாமல், அவர்கள் பெரும்பாலும் தலைப்பு 42 எனப்படும் தொற்றுநோய் கால உத்தரவின் கீழ் மெக்ஸிகோ அல்லது பிற நாடுகளுக்கு வெளியேற்றப்படுகிறார்கள்.

இருப்பினும், சமீப நாட்களில் ஒரு சில உக்ரைனியர்கள் தென்மேற்கு எல்லைக்கு வந்து நுழைய மறுக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

அகதிகளைப் அனுமதிக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்க அரசு கணிசமான பொருளாதார உதவிகளைச் செய்து வருகிறது. பைடன் செவ்வாய்க்கிழமை ஒரு செலவின மசோதாவில் கையெழுத்திட்டார். அந்த மசோதா உக்ரைன் மற்றும் ஐரோப்பிய நட்பு நாடுகளுக்கு உதவ 13.6 பில்லியன் டாலர்களை வழங்குகிறது.

ஏற்கனவே அமெரிக்காவில் உள்ள சுமார் 75,000 உக்ரைனியர்களுக்கு தற்காலிக பாதுகாப்பு அந்தஸ்தை (TPS) வழங்குவதாக அமெரிக்க அரசாங்கம் இந்த மாத தொடக்கத்தில் அறிவித்தது. இந்த நிலை அவர்களுக்கு 18 மாதங்களுக்கு நாடுகடத்தப்பட்ட நிவாரணம் மற்றும் பணி அனுமதிகளை வழங்கும். அந்த காலகட்டத்தின் முடிவில் புதுப்பிக்கப்படலாம். ஆனால், மார்ச் 1 க்குப் பிறகு வந்தவர்களுக்கு இது பொருந்தாது.




இந்தியன் எக்ஸ்பிரஸ்

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

5. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   - (i) காலையில் சேவல் ............................ (கூவியது / கூவின)
   - (ii) காற்று வீசியதால் மரங்கள் ............................ (அசைந்தது / அசைந்தன)
   - (iii) தீமை செய்வோர் ............................ (துன்பப்படுவர் / துன்பப்பட்டனர்)
   - (iv) ஒவ்வொரு பழமொழியும் பொருட் செறிவு ............................ (மிகுந்தது / மிகுந்தவை)

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
   - (i) அறம்செய விரும்பு என்றார் ஔவைப் பாட்டி
   - (ii) போட்டியில் முதலிடம் பெற்றவர் யார்

7. பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
   - (i) விடாமுயற்சியாற் பயன் உண்டு

     ..............................................................................................

   - (ii) கோபம் சிந்தனைக்கு இடையூறு

     ..............................................................................................

8. பின்வரும் வாக்கியத்தை இறந்த காலத்தில் எழுதுக.

   பறவைகள் கூடு நோக்கிப் பறக்கின்றன.

   ..............................................................................................

9. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

   இடம் + பற்றாக்குறை = ..............................................


10. பின்வருவனவற்றின் உள்ளீட்டு மரபுப் பெயர்களை எழுதுக.
    - (i) நெல் : ............................................
    - (ii) கற்றாளை : ............................................

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
    - (i) Flowers : ............................................
    - (ii) Eyes : ............................................

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

............................................

(ii) 

............................................

## விடைகள்

5. (i) கூவியது
   (ii) அசைந்தன
   (iii) துன்பப்படுவர்
   (iv) மிகுந்தது

6. (i) "அறம்செய விரும்பு" என்றார் ஔவைப் பாட்டி.
   (ii) போட்டியில் முதலிடம் பெற்றவர் யார்?

7. (i) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
   (ii) ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு

8. பறவைகள் கூடு நோக்கிப் பறந்தன.

9. இடப்பற்றாக்குறை

10. (i) அரிசி
    (ii) சோறு

11. (i) பூக்கள்
    (ii) கண்கள்

12. (i) Umbrella / UMBRELLA / umbrella
    (ii) Elephant / ELEPHANT / elephant

## கல்வி tv CHANNEL-1

**21.03.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**21.03.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிழக்கு மாகாண ஆசிரியர்களை கிழக்கிலேயே நியமிக்க வேண்டும்!

## இம்ரான் மஹ்ரூப் எம். பி.

திருகோணமலை, மார்ச் 21

தற்போது வழங்கப்படவுள்ள கல்வியியல் கல்லூரி ஆசிரியர் நியமனங்களில் கிழக்கு மாகாண கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களை, கிழக்கு மாகாணத்துக்கே நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக நேற்று தெரிவித்த அவர் மேலும், கூறுகையில்,

"நாட்டிலுள்ள கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சி நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

"2021ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் ஆளணி சுற்று நிருபத்துக்கமைய கிழக்கு மாகாணத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதனைவிட கல்வி அதிகாரிகள்,ஆசிரிய ஆலோசகர்கள் அதிபர்கள் என ஆயிரத்துக்கு மேற்பட்ட வெற் றிடங்கள் நிலவுகின்றன. இந்த வெற்றிடங்களை ஆசிரியர்களே நிரப்பி வருகின்றனர்.

"இந்த வகையில் மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் தற்போது காணப்படுகின்றன. இந்த நிலையில், தற்போது வழங்கப்படுகின்ற கல்வியியல் கல்லூரி ஆசிரியர் நியமனத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் கிழக்கு மாகாணத்துக்கு வெளியே நியமிப்பதற்கான ஏற்பாடுகள் நடப்பதை வெளியாகியுள்ள பெயர்ப் பட்டியல் மூலம் அறிய முடிகிறது.

"மாவட்ட மற்றும் பிரதேச வெற்றிடங்களின் அடிப்படையிலேயே கல்விக் கல்லூரி பயிற்சி ஆசிரியர்களுக்கான தெரிவு இடம்பெறுகின்றது. எனவே, தற்போதைய இந்த நியமனம் கல்விக் கல்லூரி தெரிவு முறைக்கு முரணாக அமைந்துவிடும்" -என்றார். (ஐ)

# ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் 105ஆவது ஆண்டு நிறைவு விழா!



ஓட்டமாவடி, மார்ச் 21

ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் 105ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் அல்ஹாஜ் எம். ஏ. ஹலீம் இன்ஹாக் தலை மையில் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக பாடசாலை யின் முன்னாள் அதிபர்களான ஏ.எம்.ஏ.காதர், எம்.சி.எச்.முஹமட், எம்.ரி.எம். அஷ்ரப், கௌரவ அதிதியாக இலங்கை கடல் கடந்த சேவை அதிகாரி யான எல். எம். அனஸ், "சிடா" அமைப்பின் பிரதித் தலைவர் ஏ. எம்.ஹனீபா, அமைப்பின் பொருளாளர் கே. எல். எம். இர்ஷாத் (முகாமையாளர் இலங்கை வங்கி), பாடசாலை அபிவிருத்திக் குழு அங்கத்தவர்கள், பாடசாலையின் பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கல்விசாரா ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, கல்லூரியின் 105 வது ஆண்டு நிறைவையொட்டி பாடசாலை மாணவர் நலன்புரி அமைப்பினரால் ஞாபகார்த்த ஸ்ரிக்கர் வெளியிடப்பட்டதுடன். ஓட்டமாவடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்கான தனியான ஊடகப் பிரிவு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கட்டார் பழைய மாணவர் அமைப்பினால் 105வது ஆண்டு நிறைவையொட்டி அனுப்பப்பட்ட வாழ்த்து மடலும் நிகழ்வில் வாசிக்கப்பட்டது. (ஐ)




# சிலிண்டர் விநியோகத்துக்கும் விசேட அதிரடிப் படை பாதுகாப்பு

**கல்முனை, மார்ச் 21**

**விசேட அதிரடிப் படை, பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று கல்முனையில் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன.**

நாடு முழுவதும் எரிவாயு சிலிண்டர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்நிலையில், மாவட்ட முகவர்கள் ஊடாகவே தற்போது எரிவாயு விநியோகம் இடம்பெறுகின்றது.

அம்பாறை மாவட்டத்துக்கான எரிவாயு சிலிண்டர் விநியோகம் கல்முனை - நற்பிட்டிமுனையிலுள்ள முகவர் ஊடாக இடம்பெற்று வருகின்றது.

இங்கு தொடர்ச்சியாக அதிகளவில் மக்கள் கூடுவதால் அடிக்கடி முரண்பாடுகள், தகராறுகளும் ஏற்பட்டன. கடந்த வாரம் பெரும் களேபரமும் ஏற்பட்டது.

இந்தநிலையில், நேற்று முன்தினம் நற்பிட்டிமுனை முகவர் ஊடாக ஆயிரம் சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன. கடும் நெருக்கடிக்கு மத்தியில் கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, சாய்ந்தமருது, காரைதீவு, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்று உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த பொதுமக்கள் மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

மக்களைக் கட்டுப்படுத்தவும் ஒழுங்குமுறையை பேணவும் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். ஆயிரம் சிலிண்டர்கள் விநி யோகிக்கப்பட்டபோதும் ஏராளமானவர்கள் சிலிண்டர்கள் கிடைக்காமல் திரும்பிச் சென்றமையையும் அவதானிக்க முடிந்தது. (ஐ)

# மின்சார கட்டணம் அதிகரிப்பு; நிறுத்த வலியுறுத்தி போராட்டம்!



திருகோணமலை, மார்ச் 21

மின்சாரக் கட்டண அதிகரிப்பை நிறுத்தக் கோரி, தீப்பந்தம் ஏற்றிய கவனவீர்ப்பு போராட்டமொன்று, தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மின்சார பாவனையாளர்கள் சங்கம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது போராட்டத்தில் கலந்துகொண்டோர் கையில் தீப்பந்தந்தை ஏற்றியவாறும், "மின் கட்டணத்தைக் குறை", "மின் கட்டண அதிகரிப்பை நிறுத்து" உள்ளிட்ட வாசகங்களை ஏந்தியவாறு கோஷங்களையும் எழுப்பினர்.

"மின் பாவனை அதிகரிப்பு, டீசல், எரிபொருள் பற்றாக்குறை, அடிக்கடி மின் வெட்டு ஏற்படுகிறது. நாளாந்தம் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றமும் சாதாரண பொது மக்கள் உட்பட அனைவரையும் பாதித்துள்ளது. இவ்வாறு போனால் எங்களதும் விவசாயிகளினதும் நிலை என்னவாகும்" என போராட்டக்காரர்கள் கேள்வி எழுப்பினர்.

"எனவே, மின்சார கட்டணத்தைக் குறைக்கவும் மின்சார கட்டண அதிகரிப்பையும் நிறுத்துமாறும், நாம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்" என்றும் கூறினர். (ஐ)

# மீன்பிடியை முன்னெடுக்க படகுகளுக்கு டீசல் வழங்குக!

## திருமலை மீனவர்கள் கோரிக்கை

திருகோணமலை, மார்ச் 21

திருகோணமலையில் மீனவர்கள் கடற்றொழிலுக்கு செல்வதற்குப் போதுமானளவு டீசல் வழங்கப்படுவத்தில்லை. எனவே, படகு அனுமதிப்பத்திரத்துக்கு அமைய டீசல் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை எரிபொருள் நிலையங்களில் பல மணி நேரம் காத்திருந்தும் தமது சீவனோபாய தொழிலான மீன்பிடியை தொடர்ந்து செய்ய முடியாத நிலை காணப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை டீசல் பெறுவதற்றாக நீண்ட வரிசையில் காத்திருந்து கொள்கலன்களில் டீசல் வழங்கமுடியாது என எரிபொருள் வழங்கமுடியாது என்று கூறியமையை தொடர்ந்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இதன் பின்னர், ஒருவருக்கு 2000 ரூபாய்க்கு மாத்திரம் டீசல் வழங்கப்பட்டதாகவும் அவ்வாறு பெறப்பட்ட டீசல் மூலம் கடலில் எவ்வளவு தூரம் செண்டு தமது தொழிலை செய்ய முடியும் என மீனவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்நிலையில் தமது படகுகளின் அனுமதிப்பத்திரத்தைக் காண்பித்தும் தமக்கு போதுமான டீசல் வழங்கப்படவில்லை என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலும் நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் விலைவாசிக்கு மத்தியில் தாங்கள் நிவாரணம் கேட்கவில்லை எனவும் தமது சீவனோபாய தொழிலை முன்னெடுக்க படகுகளின் அனுமதிபத்திரத்துக்கு அமைவாக டீசல் வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# சிலிண்டர் விநியோகத்தால் மட்டு.வில் முறுகல் நிலைமை!

மட்டக்களப்பு, மார்ச் 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் எரிவாயு விநியோகம் இடம்பெற்ற நிலையில் சி இடங்களில் பொதுமக்களுக்கும் விநி யோகஸ்தர்களுக்குமிடையே முறுகல்நிலைமைகள் ஏற்பட்டமையை அவதானிக்க முடிந்தது.

கடந்த சில வாரங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிவாயு தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன் பெரும்பாலான உணவகங்களும் மூடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாநகரம் உட்பட சில பகுதிகளில் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு பயினியர் வீதியில் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்ட இடத்தில் பொதுமக்கள் சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான வரிசையில் நின்று எரிவாயு கொள்வனவில் ஈடுபட்டனர்.

இதன்போது சுமார் 125 பேருக்கு மட்டுமே சிலிண்டர்கள் வழங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து அங்கு வரிசையில் நின்ற பொதுமக்கள் விநியோகஸ்தர்களுடன் முரண்பட்டனர்.

எரிவாயு சிலிண்டர்கள் இல்லாமல் உணவகங்கள், வெதுப்பகங்களை மூடவேண்டிய நிலையுள்ளதாகவும் இதன் காரணமாக பொதுமக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் அங்கு நின்றவர்கள் தெரிவித்தனர். (ஐ)




# லிவர்பூல் நகரத்துக்கு அருகே பெரும் காட்டு தீ!

லண்டன், மார்ச் 20

இங்கிலாந்து நகரமான லிவர்பூலுக்கு வெளியே நேற்று முன்தினம் சனிக்கிழமை பெரும் காட்டுத்தீ பரவி சொத்துக்களுக்கு சேதம் ஏற்படும் வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லிவர்பூலுக்கு தெற்கே 11 கி.மீற்றர் தொலைவில் உள்ள விரால் தீபகற்பத்தில் உள்ள பார்க்கேட் இயற்கை காப்பகத்தைச் சுற்றி வானத்தில் பெரும் தீப்பிழம்பு மற்றும் புகை மூட்டம் ஏற்பட்டுள்ளதை உள்ளூர் வாசிகள் சமூக ஊடகங்களில் வெளியிட்ட காட்சிகளில் காண முடிகிறது. தீயானது 500 சதுர மீற்றர் தூரத்துக்கு சதுப்பு நிலக் காடுகளை எரித்துள்ளது என செஷயர் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவை பிரிவினர் தெரிவித்துள்ளனர். இந்தத் தீ பரவலுக்கு வேண்டுமென்ற செய்யப்பட்ட நாசகார செயல் காரணமாக இருக்கலாம் எனவும் தீயணைப்பு பிரிவினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தீயைக் கட்டுப்படுத்தும் பணிகள் தொடர்வதாகவும் நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவை பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.(அ)

# ‘ஹைப்பர்சோனிக்’ ஏவுகணையால் ஆயுதக் கிடங்கை அழித்தது ரஷ்யா!

மொஸ்கோ, மார்ச் 21

ரஷ்யா மிக அண்மைக் காலத்தில் அறி முகப்படுத்திய “ஹைப்பர்சோனிக்” ஏவுகணை களை உக்ரைன் போரில் பயன் படுத்தியதை முதல் முறையாக உறுதிப்படுத்தியுள்ளது.

உக்ரைன் தலைநகர் கீவில் இருந்து 600 கிலோ மீற்றர்கள் மேற்கே இவானோ - ஃபிராங் கிவ்ஸ்க் பிராந்தியத்தில் உக் ரைன் படைகளது ஆயுதக் கிடங்கு ஒன்றை ஹைப்பர் சோனிக் ஏவுகணைகளால் தாக்கி அழித்துவிட்டதாக ரஷ் யப் பாதுகாப்பு அமைச்சு சனியன்று தெரிவித்துள்ளது.

அடுத்த தலைமுறை ஏவு கணை என்று அதிபர் புடினால் 2018 இல் அறிமுகப்படுத் தரப்பட்டிருந்த “கின்ஷால்” எனப் பெயரிடப்பட்ட ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் மூலமே அந்தத் தாக்குதல் நடத் தப்பட்டிருக்கிறது. மிக் போர் விமானங்கள் மூலம் பயன்படுத் தக் கூடிய இந்த வான் வழித் தரை இலக்கைத் தாக்கு கின்ற நீண்ட தூர ஏவுகணைகள் ரஷ்யா கடந்த பத்து ஆண்டுகளுக்குள் தயாரித்த சவால் மிக்க போராயுதம் ஆகும். மணிக்கு 6,000 கிலோமீற்றர்களுக்கும் அதிக வேகத்தில் - ஒலிவேகத்தை விடப் பல மடங்கு அதிக விரைவில் - பறக்கவல்ல இந்த ஹைப்பர் சோனிக் ஏவு கணைகளை அமெரிக்கா உட் பட நேட்டோ படைகளிடம் தற்சமயம் உள்ள வான் பாதுகாப்புக் கவசங்கள் எதனாலும் தடுத்துவிட முடியாது என்று ரஷ்யா கூறுகிறது.



அதேவேளை இந்த ஏவு கணையில் வழக்கமான குண்டுகளையும் தேவைப்பட்டால் அணு குண்டுகளையும் பொருத்த முடியும்.

இரண்டாயிரம் கிலோ மீற்றர்கள் தாண்டி இலக்குகளைத் தாக்கவல்ல ரஷ்யாவின் “கின்ஷால்” அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் பாதுகாப்புச் சவால்களை ஏற்படுத்தியுள்ளன. அமெரிக்க வல்லரசு தனது ஹைப்பர் சோனிக் ஏவுகணையை 2024 ஆம் ஆண்டு பாவனையில் சேர்ப்பதற்கு உத்தரவிட்டுள்ளது. பிரான்ஸின் பாது காப்பு அமைச்சர் 2019ஆம் ஆண்டு இராணுவ நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் ஹைப்பர் சோனிக் ஏவுகணைகளின் பரிசோதனைகள் கடந்த ஆண்டு இறுதியில் நடத்தப்படும் என்பதை அறிவித்தி ந்தார். சீனா ஏற்கனவே தனது ஹைப்பர் சோனிக் ஏவுகணையைக் காட்சிப்படுத்தியுள்ளது. (அ)

# உலகப் புகழ் உக்ரைன் பூனையும் போரில் தப்பி பிரான்ஸில் தஞ்சம்!

## பல லட்சம் செல்லப் பிராணிகளும் அகதிகளாக அலைகின்ற அவலம்



பரிஸ், மார்ச் 21

ஸ்டீபன் என்பது இன்ஸ்ரகிராம், ரிக்ரொக் வீடியோக்களால் உலகெங்கும் பிரபலமாக அறியப்பட்ட உக்ரைன் பூனையின் பெயர். சமூகவலைத் தளங்களில் சுமார் பத்து லட்சம் பயனாளர்களால் பார்வையிடப்படுகின்ற அதன் வீடியோக்களைக் கடந்த பல நாட்களாகக் காணவில்லை.

கார்கீவ் நகரில் ஸ்டீபனின் குடியிருப்புப் பகுதிகளைச் ஷெல்கள் தாக்கியதை அடுத்து அனைவரும் அங்கிருந்து தப்பி வெளியேறிவிட்டனர். ஸ்டீபனுக்கு என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரியாமல் இருந்தது.

ஸ்டீபனும் அதைப் பராமரிக்கின்ற அனா என்ற இளம் பெண்ணும் அவசர சேவையினரது உதவியோடு கார்கீவ் நகரில் இருந்து இருபது மணி நேரம் ரயில் பயணம் செய்து லிவீவ் நகரை அடைந்து அங்கிருந்து பின்னர் எல்லை தாண்டிப் போலந்துக்கு வந்தடைந்த தகவலை சமூகவலைத் தளப் பதிவு ஒன்று உறுதி செய்தது.

உலக அளவில் இணையப் பிரபலங்களையும் வலைப் பதிவர்களையும் உள்ளடக்கிய அமைப்பின் உதவியால் ஸ்டீபனுக்குத் தற்போது பிரான்ஸில் புகலிடம் கிடைத்திருக்கிறது. அமெரிக்கப் பாடகர் ஸ்டீவி வொண்டரின்என்ற பாடல் வரிகளோடு ஸ்டீபன் பூனை தோன்றும் ரிக்ரொக் வீடியோ ஒன்று 2019 இல் 27 மில்லியன் பார்வைகளைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

போரினால் ஸ்டீபனைப் போன்று பல லட்சக்கணக்கான வளர்ப்புப் பிராணி கள் அகதிகளாகியுள்ளன. மேலும் பல லட்சக் கணக்கான நாய்கள், பூனைகள் போன்றவற்றைப் பலரும் போர்ப் பகுதிகளில் கைவிட்டு வெளியேறியுள்ளனர். செல்லப் பிராணிகளைப் பிரிவதன் வலி அதை அனுபவித்து உணர்ந்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

குறைந்தளவு அவசிய உடைமைகளுடன் வருகின்ற அகதிகளது வளர்ப்பு மிருகங்களைச் சில நாடுகள் தங்கள் எல்லைகளுக்குள் அனுமதிப்பதில்லை. அதனால் எல்லைகளில் அவை கைவிடப்படுகின்ற அவலமும் காணப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்து உக்ரைனியர்கள் தம்மோடு நாய்கள், பூனைகளையும் தூக்கிக் கொண்டு வந்துள்ளதால் அவற்றுக்கான பராமரிப்பு வசதிகளையும் செய்ய வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. பிரான்ஸில் பலநகரங்களில் அகதிகளுக்காக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன. அத்துடன் வளர்ப்புப் பிராணிகளுக்கான உணவு சேகரிக்கும் சேவைகளும் தொடங்கப்பட்டுள்ளன.

இதேவேளை,

உக்ரைன் வன விலங்குப் பூங்காக்களில் இருந்த ஏராளமான காட்டு மிருகங்கள் பாதுகாப்புக் கருதி போலந்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. (அ)



# மகிழ்ச்சியான நாடுகளில் முதலிடத்தில் பின்லாந்து

லண்டன், மார்ச் 21

2021ஆம் ஆண்டிற்கான உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்காக 149 நாடுகள் கணக்கெடுப்பில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இந்த பட்டியல், மொத்த உள்நாட்டு உற்பத்தி, சமூக ஆதரவு, சுகாதார வாழ்க்கை, சொந்த வாழ்வை முடிவு செய்யும் சுதந்திரம், மொத்த மக்கள் தொகை மற்றும் ஊழல் அளவு ஆகியவை அளவுகோல்களாக கொள்ளப்பட்டு முடிவு செய்யப்படுகிறது.

இதில் கடந்த உலகின் முதல் 7 மகிழ்ச்சியான நாடுகள் அனைத்தும் வட ஐரோப்பிய நாடுகளாகும்.

இந்த பட்டியலில் பின்லாந்து 7.842 புள்ளிகளுடன் தொடர்ச்சியாக 4ஆவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.

தொடர்ந்து டென்மார்க் (7.620), சுவிட்சர்லாந்து (7.571), ஐஸ்லாந்து (7.554), நெதர்லாந்து (7.464), நோர்வே (7.392), மற்றும் ஸ்வீடன் (7.363) ஆகியவை உள்ளன.

இந்த பட்டியலில், அமெரிக்கா 16ஆவது இடத்திலும், ஐரோப்பிய நாடுகளான பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் முறையே 15ஆவது மற்றும் 20ஆவது இடத்திலும் உள்ளன.

உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில், இலங்கை 4.3 புள்ளிகளுடன் 127ஆவது இடத்தில் உள்ளது.

இதேபோன்று இந்த பட்டியலில் இந்தியாவுக்கு 136ஆவது இடம் கிடைத்து உள்ளது.(அ)

# சுவிஸில் உக்ரைன் அகதிகளுக்கு தற்காலிக ‘எஸ்’ வதிவிட அனுமதி!

பரிஸ், மார்ச் 21

சுவிற்சர்லாந்து நாட்டுக்கு வருகின்ற உக்ரைன் அகதிகளுக்கு இதுவரை எந்தநாட்டவருக்கும் வழங்கப்படாத விதமாக “எஸ்” என்னும் வதிவிட அனுமதி உடனடியாகக் கிடைக்கவுள்ளது.

நாட்டின் நீதி அமைச்சர் இந்தத் தீர்மானத்தை அறிவித்திருக்கிறார். ஆரம்ப கட்டமாக ஓராண்டு காலம் நாட்டில் தங்குவதையும் உடனடியாகத் தொழில் ஒன்றைத் தேடிக் கொள்வதையும் அனுமதிக்கின்ற இந்த எஸ் விஸா 1999 இல் பால்கன் மோதலின்போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிறகு வெளிநாட்டு அகதிகளுக்கு முதல் தடவையிலேயே அந்த “எஸ்” அனுமதி வழங்கப்படுவது இதுவே முதலாவது சந்தர்ப்பம் ஆகும்.

போர் தொடங்கியதில் இருந்து இதுவரை சுமார் ஆறாயிரம் உக்ரைனியர்கள் சுவிஸில் தங்களைப் பதிவு செய்திருக்கின்றனர். 50,000-60,000 வரையான உக்ரைன் அகதிகள் நாட்டுக்குள் வருகை தரக் கூடும் என்று சுவிஸ் அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். சுவிஸ் கன்ரன்களில் இயங்கும் புகலிட நிலையங்களில்5 ஆயிரம் தங்கும் இடங்களும், தனிபட்டவர்களது வீடுகள் மற்றும் பொது இடங்களில் சுமார் 45 ஆயிரம் தங்கும் இடங்களையும் அதிகாரிகள் தயார் செய்துள்ளனர்.

ஐ. நாவின் மதிப்பீடுகளின் படி இதுவரை 2.5மில்லியன் மக்கள் உக்ரைனை விட்டு அகதிகளாக வெளியேறியுள்ளனர். அவர்களில் பெரும்பான்மையானோர் போலந்து நாட்டில் தங்கியுள்ளனர். அங்கிருந்து பின்னர் அவர்கள் வாகனங்களிலும் ரயில்களிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக ரயில்களில் உக்ரைனியர்கள் வந்து சேர்வதால் பேர்ளின் ரயில் நிலையம் அகதிகளால் நிறைந்து காணப்படுகிறது. அவர்களை வரவேற்கவும் உதவிகளைச் செய்வதற்கும் அங்கு தொண்டர்கள் முழு மூச்சுடன் சேவையில் ஈடுபட்டுவருகின்றனர்.

மிகக் குறுகிய நாள்களுக்குள் மிகப் பெரும் அகதிகள் படையெடுப்பை உக்ரைன் யுத்தம் உருவாக்கியுள்ளது.

இருபது நாட்களுக்குள் இருபத்தைந்து லட்சத்துக்கும் மேற்பட்டோர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர். அவர்களில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமானோர் ஜேர்மனிக்குள் வருகை தந்துள்ளனர். ஜேர்மனி எந்த வித கட்டுப்பாடுகளும் இன்றியே அகதிகளை உள்ளெடுக்கிறது. (அ)

ஈழநாடு



# இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் படோஸா, மரியா இறுதியில்!



கலிபோர்னியா, மார்ச் 21

இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸின் இறுதிப் போட்டிக்கு மரியா சக்காரி - ஸ்வியாரெக் ஆகியோர் மோதுகின்றனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

முதல் அரையிறுதியில், 2முறை கிராண்ட்ஸ்லம் பட்டம் வென்றி ருமேனியாவின் சிமோனா ஹாலேப்பை எதிர்கொண்டார் போலந்தின் இகா ஸ்வியாரெக்.

முதல் செற்றில் ஸ்வியாரெக் 7 - 6 (6- 8), 6 - 4 என்ற செற்களில் அனுபவ வீராங்கனையான ஹாலேப்பை வீழ்த்தினார்.

உலகின் நான்காம் நிலையில் இருந்த ஸ்வியாரெக் இந்த வெற்றி மூலம் மூன்றாம் இடத்துக்கு முன்னேறினார்.

மற்றோர் அரையிறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான ஸ்பெயினின் படோஸாவும், கிரீஸின் மரியா சக்காரியும் மோதினர். இதில், 6 - 2, 4 - 6, 6 - 1 என்ற செற்களில் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறினார் மரியா.

(ஐ)

# பாகிஸ்தான் - ஆஸி. 3ஆவது டெஸ்ட் இன்று

லாகூர், மார்ச் 21

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் 11 வீரர்கள் பெயரை அவுஸ்திரேலிய அணி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி முதலில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. ராவல் பிண்டி மற்றும் கராச்சியில் நடைபெற்ற முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளும் சமநிலையில் முடிவடைந்தன.

இந்த நிலையில் மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று திங்கட்கிழமை லாகூரில் தொடங்குகிறது.

அவுஸ்திரேலிய அணி விவரம்:

டேவிட் வோர்ணர், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுஷேன், ஸ்டீவ் ஸ்மித், டிராவிஸ் ஹெட், கமரூன் க்ரீன், அலெக்ஸ் ஹரி (விக்கெட் காப்பாளர்), மிற்செல் ஸ்ரார்க், பட் கம்மின்ஸ் (அணித்தலைவர்), மிற்செல் ஸ்வெப்சன், நதன் லியோன்.




# ஆசியக் கிண்ண போட்டி இம்முறை இலங்கையில்!

கொழும்பு, மார்ச் 21

ஐந்து டெஸ்ட் கிரிக்கெட் விளையாடும் நாடுகளும் தகுதிகாண் மூலம் தெரிவாகும் ஒரு நாடுமாக 6 நாடுகள் பங்குபற்றும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 27ஆம் திகதியிலிருந்து செப்ரெம்பர் 11ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இந்த வருடம் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி இருபது 20 கிரிக்கெட் போட்டியாக நடத்தப்படவுள்ளது.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஐந்து டெஸ்ட் விளையாடும் நாடுகளும் இந்தப் போட்டியில் பங்கேற்கவுள்ளன. ஆறாவது நாட்டைத் தெரிவு செய்யும் தகுதிகாண் சுற்று ஓகஸ்ட் 20ஆம் திகதியிலிருந்து நடைபெறும்.

தகுதிகாண் சுற்றில் ஐக்கிய அரபு இராச்சியம், குவைத், சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகிய 4 நாடுகள் விளையாடவுள்ளன.

ஆசியக் கிண்ணப் போட்டி ஒருநாள், இருபது -20 போட்டி என இரு வகைகளில் இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மகளிர் உலகக் கிண்ணம் இங்கிலாந்து த்ரில் வெற்றி!



ஹமில்டன், மார்ச் 21

நியூசிலாந்துக்கு எதிரான நேற்றைய போட்டியில் இங்கிலாந்து அணி ஒரு விக்கெட்டால் த்ரில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்தில் உலகக் கிண்ணக் ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடக்கிறது.

இதில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஹீத்தர் நைட் முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தார்.

இங்கிலாந்தின் சிறப்பான பந்துவீச்சால் நியூசிலாந்து அணியால் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்த முடியவில்லை.

மேடி க்ரீன் மட்டும் அரைச்சதம் அடித்து 52 ஓட்டங்கள் எடுத்தார். 48.5 ஓவர்களில் நியூசிலாந்து அணி 203 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

204 ஓட்டங்கள் என்ற வெற்றியுடன் களமிறங்கிய இங்கிலாந்துக்கு ஹீத்தர் நைட் மற்றும் நடாலியா சிவர் நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்தினர். சிவர் அரைசசதம் கடந்து 61 ஓட்டங்களை எடுத்தார்.

எனினும், 196 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்களை இழந்து தடுமாறியது இங்கிலாந்து அணி. எனினும், டீன் மற்றும் ஷ்ரப்சோல் பொறுப்புடன் விளையாடி இங்கிலாந்து வெற்றியை உறுதி செய்தனர்.

47.2 ஓவர்களில் இங்கிலாந்து அணி 204 ஓட்டங்கள் எடுத்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம், அரையிறுதி வாய்ப்பை இங்கிலாந்து அணி தக்கவைத்துள்ளது.

## இங்கிலாந்து - மேற்கிந்தியா

# இரண்டாவது போட்டியும் சமநிலையை நோக்கி...!

பிரிட்ஜ்ரவுன், மார்ச் 21

இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவு கள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டியும் சமநிலை நோக்கி நகர்கிறது.

பிரிட்ஜ்ரவுனில் நடக்கும் இந்தப் போட்டியின் நான்காம் நாள் போட்டியின் முடிவில் இங்கிலாந்து அதன் இரண்டாவது இனிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன் பிர காரம் 136 ஓட்டங்




களால் இங்கி லாந்து முன்னிலையில் இருக்கின்றது.

முதல் நான்கு நாட்களிலும் இரண்டு அணிகளும் சம அளவில் மோதிக்கொண்ட இந்தப் போட்டி யில் இரண்டு அணிகளிலும் தலா இருவர் சதம் குவித்ததுடன் 400க் கும் மேற்பட்ட ஓட்டங்கள் ஒவ் வொரு அணியாலும் குவிக்கப்பட் டது.

கடந்த புதன்கிழமை ஆரம்ப மான இந்தப் போட்டியில் கிட்டத் தட்ட இரண்டு தினங்கள் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 9 விக் கெட் இழப்பு 507 ஓட்டங்கள் பெற்ற நிலையில் முதல் இனிங்ஸை நிறுத்திக்கொண்டது.

அணித் தலைவர் ஜோ ரூட் 316 பந்துகளை எதிர்கொண்டு 14 பௌண்ட்ரிகளுடன் 153 ஓட்டங்களைக் குவித்தார். அவருக்கு பக்கபலமாக துடுப்பெடுத்தாடிய டான் லோரன்ஸ் 91 ஓட்டங்களையும் பென் ஸ்ரோக்ஸ் 11 பௌண்ட் ரிகள், 6 சிக்ஸர்கள் 120 ஓட்டங் களையும் பெற்றார்.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியும் கிட்டத்தட்ட 2 நாட்கள் துடுப்பெடுத்தாடி 187.5 ஓவர்களை எதிர்கொண்டு 411 ஓட் டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து அணித் தலை வருக்கு ஒப்பாக துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் கிரெய்க் பிராத்வெய்ட் 489 பந்துகளை எதிர்கொண்டு 17 பௌண்ட்ரிகளுடன் 160 ஓட்டங்களைப் குவித்தார்.

மத்திய வரிசையில் ஜேர்மெய்ன் ப்ளக்வூட் 11 பௌண்ட்ரிகளுடன் 102 ஓட்டங்களைப் பெற்றார்.

இவர்கள் இருவரும் 4ஆவது விக்கெட்டில் 183 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இவர்களுக்கு அடுத்த படியாக ஷமார் ப்றூக்ஸ் (39), ஜொஷுவா த சில்வா (33) ஆகிய இருவரும் அதிகப்பட்ச பங்களிப்பை வழங்கினர்.

இங்கிலாந்து பந்துவீச்சில் ஜெக் லீச் 118 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் களையும் சகீப் மஹ்மூத் 58 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை யும் பென் ஸ்ரோக்ஸ் 65 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

# பால் தேநீரின் விலை 100 ரூபாயாக உயர்வு

கொழும்பு, மார்ச் 21

பால் தேநீரின் விலையை 100 ரூபாயாக அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

கடந்த நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களில் பால்மாவுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவியது. பால்மா தட்டுப்பாட்டுடன் டிசெம்பர் மாதம் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டது.

340 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பால்மா 540 ரூபாய் வரை விலை உயர்ந்தது. இதன் காரணமாக சிற்றுண்டிச் சாலைகளில் பால் தேநீரை விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

நுகர்வோருக்கு அதிக விலைக்கு பால் தேநீரை விற்பனை செய்ய முடியாது என்பதால் பால் தேநீர் விநியோகத்திலிருந்து நாம் விலகினோம். இதனால் நுகர்வோர் பாரிய அசௌகரியங்களை எதிர் கொண்டனர்.

இவ்வாறானதொரு நிலையில் தற்போது மீண்டும் பால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இம்முறை நுகர்வோரை அசௌகரியங்களுக்கு உள்ளாக்க நாம் விரும்பவில்லை. நுகர்வோரை கருத்தில்கொண்டு அவர்களுக்கு போசணை மிக்க பால்தேநீரை விநியோகிக்க வேண்டும் என்பதற்காக பால் தேநீரின் விலையை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளோம்.

இதன்படி, 100 ரூபாய்க்கு பால் தேநீரை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம். நீர் கலக்காத போசணைமிக்க பால் தேநீரையே நாங்கள் வழங்குவதற்கு உள்ளோம். எனவே அதன் விலையை 100 ரூபாயாக அதிகரித்துள்ளோம். சிற்றுண்டிச்சாலைகளின் உரிமையாளர்களுக்கும் இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒரு கோப்பை பால் தேநீருக்கு மூன்று கரண்டி மா கலந்த போசணைமிக்க பால் தேநீரை நுகர்வோருக்கு வழங்குமாறு சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம் - என்றார். (கே)

# உலகின் மகிழ்ச்சியான நாடுகள்! இலங்கைக்கு 127ஆவது இடம்!

நியூயோர்க், மார்ச் 21

ஐக்கிய நாடுகள் சபையின் 2022ஆம் ஆண்டுக்கான உலக மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் இலங்கை 127ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. பின்லாந்து உலகின் மகிழ்ச்சியான நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு, உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் 149 நாடுகளில் இலங்கை 129வது இடத்தில் இருந்தது. இம்முறை இலங்கை இரண்டு இடங்கள் முன்னேறியுள்ளது.

இந்தப் பட்டியலில் உலகின் மகிழ்ச்சியற்ற நாடாக ஆப்கானிஸ்தான் பட்டியலிடப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக கடுமையான பொருளாதார சரிவை சந்தித்துள்ள லெபனான், ஆப்கானைவிட ஓர் இடம் முன்னேக்கியுள்ளது.

பட்டியலில் பாகிஸ்தான் 121ஆவது இடத்திலும்,



இந்தியா 136வது இடத்திலும் உள்ளன. நேபாளம் 84ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 94ஆவது இடத்திலும் உள்ளன. உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் முதல் 20 இடங்களில் ஆசிய நாடுகள் எதுவும் இல்லை.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பிற்கு முன்னர் இந்த பட்டியல் நிறைவுற்றது.

முதலிடத்தில் பின்லாந்தும், இரண்டாம் இடத்தில் டென்மார்க்கும், மூன்றாமிடத்தில் ஐஸ்லாந்தும் உள்ளன. உலக மகிழ்ச்சி அறிக்கை, மக்கள் தங்கள் மகிழ்ச்சியைப் பற்றிய சொந்த மதிப்பீட்டின் அடிப்படையிலும், பொருளாதார மற்றும் சமூகத் தரவுகளின் அடிப்படையிலும் தயாரிக்கப்படுகிறது. (ஐ)

# விபச்சார விடுதி முற்றுகை கல்கிசையில் இருவர் கைது

கொழும்பு, மார்ச் 21

கொழும்பு கல்கிசை பொலிஸ் பிரிவில் மசாஜ் நிலையம் என்ற பெயரில் இயங்கிவந்த விபச்சார விடுதி சுற்றி வளைக்கப்பட்டுள்ளதுடன், தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

35, 42 வயதுடைய இரு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# உள்நாட்டு துப்பாக்கிகள் இரண்டுடன் இருவர் கைது

கொழும்பு, மார்ச் 21

இரத்தினபுரி, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களின் இரு வேறு பிரதேசங்களில் உள்நாட்டு துப்பாக்கிகள் இரண்டுடன் இருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக, இரத்தினபுரி கொடக்கவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெலக்கபொல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், உள்நாட்டு துப்பாக்கியுடன் 45 வயது நபர் கைதுசெய்யப்பட்டார்.

இதேவேளை, அநுராதபுரம் கெக்கிராவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரத்மல்கந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கெக்கிராவ பிரதேசத்தை சேர்ந்த 42 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

### காகித தட்டுப்பாடு எதிரொலி

# மின் கட்டணப் பட்டியல் அச்சிடுவதிலும் சிக்கல்!

கொழும்பு, மார்ச் 21

நாட்டில் நிலவும் காகிதத் தட்டுப்பாடு காரணமாக மின்சார கட்டணப் பட்டியல் அச்சடித்தல் மற்றும் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

வாடிக்கையாளர்கள் விரும்பினால், இலத்திரனியல் பட்டியலுக்கு மாறுவதற்கு அவர்களை ஊக்குவிக்குமாறு எரிசக்தி அமைச்சு, இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.

கடந்த வாரம், நாட்டில் நிலவும் தாள் தட்டுப்பாடு காரணமாக, சில பரீட்சைகள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று மாகாண கல்வித் திணைக்களங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
26 - 12 - 1958

மறைவு
19 - 03 - 2022

## அந்தோனிப்பிள்ளை அன்ரன் அன்பழகன்

(ஓய்வு பெற்றஆசிரியர்)

கிளிநொச்சி உருத்திரபுரத்தை பிறப்பிடமாகவும் பெரியபளை, பளையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் அந்தோனிப்பிள்ளை அன்ரன் அன்பழகன் அவர்கள் 19.03.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - டெய்சி தம்பதியரின் அன்பு மகனும், யூழர் திரிஷா அவர்களின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், ஸ்ரீபன் சஞ்சிகன், அமலதர்சிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கிருத்திகா அவர்களின் பாசமிகு மாமனாரும், ஆதிரனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதி நிகழ்வுகள் இன்று (21.03.2022) திங்கட்கிழமை காலை10.00 மணிக்கு புலோப்பளை புனித இராயப் பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இராயப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

# லாப்ஸ் எரிவாயு சிலிண்டர் 4,199 ரூபாயாக அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 21

லாப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனத்தின் 12.5 கிலோ கிராம் எடையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 4 ஆயிரத்து 199 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை ஆயிரத்து 680 ரூபாயாகவும் 2 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 672 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக எரிவாயு தட்டுப்பாடு காரணமாக லாப்ஸ் நிறுவனம் தனது உற்பத்தியை நிறுத்தியிருந்தது. இந்த நிலையில், அதிகரித்த விலையுடன் விநியோகத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனை தொடர்கிறது!

கொழும்பு, மார்ச் 21

தடைவிதிக்கப்பட்டிருந்த நிலையில் தொடர்ந்து பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருட்களின் பாவனை நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

8 வகையான பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருட்களுக்குத் தடை விதிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய போதிலும், அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பிளாஸ்ரிக் பொருட்களுக்கான தடையை தொடர்ந்து, பிளாஸ்ரிக் கரண்டிகள், ஐஸ்கிறீம் கோப்பைகளுக்குப் பதிலாக பன்னாட்டு நிறுவனங்கள் மாற்றுப் பொருட்களை அறிமுகப்படுத்தியுள்ளன.

எனினும், குறித்த வர்த்தமானி அறிவித்தல் தாமதமாகி வருவதனால் இந்த நிறுவனங்கள் மீண்டும் பிளாஸ்ரிக் பாவனைக்கு திரும்புவதாக சுற்றாடல் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## நாம் ஏற்படுத்திய...

வந்துசென்றனர்.

"கொழும்பில் பணிபுரியும் அரச ஊழியர்கள் வெள்ளிக்கிழமை மாலை ரயிலில் ஏறி காலையில் யாழ்ப்பாணத்தை சென்றடைவர். அது ஒரு காலம். அந்தக் காலத்தில் யாழ்ப்பாணம் எங்களுக்கு வெகு தொலைவில் இல்லை. மிக நெருக்கமாக உணர்ந்தோம்.

"அந்த சகாப்தம் 1980க்குப் பின்னர் திடீரென மறைந்தது. யாழ்ப்பாணம் செல்லும் ரயில் பாதையை உடைத்தனர். தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் செல்ல வேண்டிய யாழ்தேவி நின்றது. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பண்பாட்டுப் பாலமாக யாழ்தேவியைப் பார்க்கிறேன்.

"வடக்கு மக்கள் சுதந்திரத்தை இழக்க ஆரம்பித்தனர். 30ஆண்டுகளாக அந்த இருண்ட சகாப்தம் இருந்தது. அந்த இருண்ட காலத்தில் வடக்கு மக்களின் வாழ்வுரிமையும் அபிவிருத்தியும் பறிக்கப்பட்டன. மே 19, 2009 அன்று அந்த இருண்ட சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது. அதன் பின்னர் வடக்கு மக்கள் இழந்த உயிர்களை தவிர அனைத்தையும் வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

"யுத்தம் முடிவடையும்போது இன்று வடக்கில் உள்ள எதையும் அன்று காண முடியவில்லை. வடக்கும் தெற்கும் யாழ் தேவியால் இணைக்கப்பட்டன. வடக்கில் மாகாண சபை மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால், அந்த சகாப்தத்திற்கு 2015இல் இடையூறு ஏற்பட்டது. 2015இன் பின்னர் நாங்கள் நாங்கள் செய்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டன. நல்லிணக்கம் என்ற திட்டம் வந்தது.

"அவசரகால சட்டங்களை நீக்கி நாம் ஏற்படுத்திய மாகாண சபை நல்லாட்சியுடன் கலைக்கப்பட்டது. நல்லாட்சி காலத்தில் ஒரு வீதி அபிவிருத்தியோ அல்லது மின்சார திட்டமோ யாழ்ப்பாணத்துக்கு கிடைக்கவில்லை. நாட்டிற்கும் கிடைக்கவில்லை.

"புதிய மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டிருந்தால் யாழ்ப்பாண மக்கள் இன்று இருளில் மூழ்கியிருக்க மாட்டார்கள். ஆனால், அந்த நல்லிணக்கத் திட்டத்திற்காக பில்லியன்கள் செலவிடப்பட்டன. சமாதானம் பற்றிய பாடலுக்கு பில்லியன்கள் செலவழிக்கப்பட்டன. யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு குடிநீர் குழாய் வழங்கப்படவில்லை.

"2019ஆம் ஆண்டு மீண்டும் இந்த நாட்டைக் கைப்பற்றிய போது, நல்லாட்சியின் மூலம் பின்னோக்கிச் சென்ற நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப திட்டமிட்டோம். ஆனால், திடீரென்று கோவிட் தொற்று ஏற்பட்டது. அந்த நேரத்தில் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் எமது மக்களைப் பாதுகாக்கவே விரும்பினோம். நாம் அதை செய்தோம். வடக்கு மக்களைப் போன்று தென்னிலங்கை மக்களையும் தொற்று நோயிலிருந்து பாதுகாக்க முடிந்தது"- என்றார்.

## பிரதமருக்கு...

ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் பொத்துவில் தொடக்கம் பருத்தித்துறை பேரணி இயக்கத்தினரும் மட்டுவிலில் பொருளாதார மத்திய நிலையம் நோக்கிச் சென்றனர்.

இவ்வாறு சென்றவர்களை மட்டுவில் வண்ணாத்தி பாலம் அருகே பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அவர்களை வாகனங்களை விட்டு கீழே இறங்கவிடாமல் தடுத்து நிறுத்தினர். தொடர்ந்து அங்கிருந்து அவர்களை திருப்பியனுப்ப முயன்றனர்.

வாகனத்தில் இருந்து இறங்கவிடாமல் தடுக்கப்பட்டவர்களில் தவத்திரு வேலன் சுவாமிகளும் இருந்தார். இதனிடையே, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிலர் பேருந்திலிருந்து கீழே இறங்கி பொலிஸாரின் அடக்குமுறையை எதிர்த்துப் போராடினர். அத்துடன், பேருந்தை திரும்பவிடாது வீதியிலேயே படுத்து தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர். இதனால், அந்தப் பகுதியில் பதற்றம் அதிகரித்தது.

இந்நிலையில், பொருளாதார மத்திய நிலையத்தைத் திறந்து வைத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்து சென்றமையை தொடர்ந்து அந்தப் பகுதிக்கு செல்ல போராட்டக்காரர்கள் அனுமதிக்கப்பட்டனர். அந்தப் பகுதிக்கு சென் போராட்டக்காரர்கள் பிரதமரை வரவேற்க வைக்கப்பட்டிருந்த பதாதைகளை அறுத்து அவற்றுக்கு தீ மூட்டி எரித்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதனிடையே, நல்லூர் ஆலயத்தை தரிசிக்க செல்லவிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்ப்பு போராட்டம் நடைபெறவிருப்பதை அறிந்து கொண்டு அங்கு செல்லவில்லை என்று அறிய வருகின்றது. நல்லூரான் ஆலயத்துக்கு பதிலாக அவர் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்கு சென்று தரிசித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய பிற செய்திகள் பக்கம் 5இல்)

## சகல...

மாநாட்டில் பங்கேற்கு மாறு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டதோடு அதற்காக இரு பிரதிநிதிகளின் பெயர்களையும் முன்மொழியுமாறு கோரப்பட்டது. அதற்கு அமைவாக, நானும் பாராளு மன்ற உறுப்பினர் சுமந்திரனும் அந்த மாநாட்டில் பங்கேற்பதாக அறிவித்துள்ளோம்.

இந்நிலையில், 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் தற்போது வரையில் இனப்பிரச்னை உட்பட பல்வேறு பிரச்னைகள் காணப்படுகின்றன. தற்போது அந்தப் பிரச்னைகளுடன் பொருளாதார ரீதியாக நெருக்கடியான நிலைமைகள் உருவெடுத்துள்ளன. இந்தப் பிரச்னைகள் அனைத்தும் தீர்வினை எட்டுவதாக இருந்தால் மக்களுக்கான இறைமை பகிரப்பட வேண்டும். மக்களின் இறைமை பகிரப்படுத்தப்படுமிடத்து அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வைக் காண முடியும். துரதிர்ஷ்டவசமாக இந்த விடயம் நடைமுறைச்சாத்தியமாகாத நிலைமை தொடருகின்றது.

ஆகவே, தற்போதைய பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது உள்ளிட்ட அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வாக மக்களுக்கான இறைமையை பகிர்ந்தளிக்குமாறு வலியுறுத்தவுள்ளோம். அத்துடன், விசேடமாக தமிழ் மக்கள், மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் முகங்கொடுக்கும் பிரச்னைகளையும் எடுத்துக்கூறவுள்ளோம் - என்றார். (ஐ)

## பேருந்து...

பட்ட பயணிகள் பயணித்தனர். இதிலேயே பலர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த தனியார் பேருந்தும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் போட்டிபோட்டு ஓடியமையமையே இந்த விபத்துக்குக் காரணம் என்றும், போட்டிபோட்டு ஓடிய இ.போ. ச. பேருந்து சடுதியாக வேகத்தை குறைத்தபோது விபத்தைத் தடுப்பதற்காக தனியார் பேருந்து வீதியோரமாக சென்றதாகவும் இதன்போது மரம் ஒன்றுடன் மோதி தடம்புரண்டதாகவும் விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்தையடுத்து அங்கு கூடியவர்கள் பேருந்தில் சிக்கியவர்களை மீட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். (ஐ)

## தண்ணீர்...

மலசலகூடத் தேவைக்காக வைக்கப்பட்டிருந்த தண்ணீர் நிறைந்த பரலினுள் தவறி விழுந்துள்ளது. இதில், நீரில் மூழ்கி அந்தக் குழந்தை உயிரிழந்ததாகத் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஜனாதிபதியுடனான்...

சிந்தித்து இந்த முடிவை மட்டக்களப்பில் கூடிய தலைமைக்குழு எடுத்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் மட் டக்களப்பு மாவட்டத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், நேற்று (நேற்று முன் தினம்) எமது கட்சியின் தலைமைக் குழு மட்டக்களப்பில் கூடி சில தீர்மானங்களை எடுத்திருந்தது. குறிப்பாக ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்தமையை ஒட்டி ஏற்கனவே நாங்கள் சம்பந்தன் ஐயாவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தோம். அது தொடர்பில் சில தீர்மானங்களை எடுத்திருந்தோம்.

எமது தீர்மானத்தின் போது நாங்கள் இரண்டு தலைவர்கள் பற்றிச் சிந்தித்தோம். ஒன்று எங்கள் கட்சியின் தலைவர் ஸ்ரீசபாரெத்தினம் மற்றையவர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆகியோரின் சிந்தனை இந்த நேரத்தில் எவ்வாறு இருந்திருக்கும் என்று நாங்கள் சிந்தித்துப் பார்த்தோம். அந்த அடிப்படையிலே அவர்கள் இருந்திருந்தால் நிச்சயமாக இந்தப் பேச்சுக்கு நிபந்தனை விதித்திருப்பார்கள்.

அந்த நிபந்தனை என்பது நல்லிணக்க அடிப்படையிலே சில விடயங்களை ஜனாதிபதி செய்ய வேண்டும் என்று நாங்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

## சர்வகட்சி...

அந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசு, புளொட், ரெலோ ஆகிய கட்சி களுக்கும் தனித் தனி அழைப்புகள் அனுப்பப் பட்டுள்ளன.

இந்தக் கூட்டத் தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்குபற்றும் என அதன் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

புளொட் தரப்பில் அதன் தலைவர் த. சித்தார்த்தன் எம்.பி. பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ரெலோ இந்த மாநாட்டில் பங்கு பற்றுமா என்பது தெரியவில்லை.

அரசுக் கூட்டணியில் பங்காளிக் கட்சிகளாக இருந்து கொண்டு, அரசுத் தலைமையுடன் முறுகிக் கொண்டு நிற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட 11 கட்சிகளுக்கும் கூட தனித்தனியாக அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டும்படி அரச தலைவரான ஜனாதிபதியிடம் கோரியதே சுதந்திரக் கட்சிதான். அதனால் அந்தக் கட்சி அதில் கலந்துகொள்ளும் என்று தெரிகின்றது.

எனினும், விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல ஆகியோரின் கட்சிகள் இந்தச் சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றமாட்டா என்று கூறப்படுகின்றது. சில சமயங்களில் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் கட்சியும் கூட அதைப் பகிஷ்கரிக்கலாம்.

சர்வகட்சி மாநாடு நடைபெறும் புதனன்று மக்கள் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருக்கும் ஜே.வி.பி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன மாநாட்டில் பங்குபற்றாது என அறிவித்துள்ளன.

முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி இந்த மாநாட்டில் பங்குபற்றுமா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

சிறிய கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் தலா ஓர் அழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரான இரா.சம்பந்தனின் வயோதிப நிலையைக் கருத்தில்கொண்டு, அவருடன் ஓர் உதவியாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வசதியாக தமிழரசுக்கு இரண்டு அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன என மாநாட்டு ஏற்பாட்டாளர்களுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

ஜனாதிபதி இன்றுவரைக்கும் போரை நடத்தி முடித்தவர் என்ற பெருமிதத்தோடும் இறுமாப்போடும் சிங்கள மக்களின் வாக்குகளால் வந்தவர் என்கின்ற இனத்துவேசத்தோடும், இனப் பிரச்னை இந்த நாட்டிலே இல்லை பெருளாதாரப் பிரச்னை மாத்திரம்தான் இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டு இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைக்கின்றார்.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றது. இறுதியாகப் பங்கேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில், அங்கத்துவக் கட்சிகளாக இருக்கின்ற தமிழ் அரசுக் கட்சியும் புளொட் கட்சியும் பேச்சுக்கு செல்வதாகத் தெரிவித்தார்கள். நாங்கள் எங்களின் தலைமைக்குழுவில் தீர்மானித்தே எங்கள் முடிவை அறிவிப்பதாகத் தெரிவித்திருந்தோம்.

எங்களின் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் ஆதரிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருந்தோம். எங்கள் பங்காளிக் கட்சிகள் ஜனாதிபதியுடன் பேச்சுக்குச் செல்வதை சற்று நிதானமாகச் சிந்திக்க வேண்டும். நேற்றைய தினம் (நேற்றுமுன்தினம்) கூட யாழ்ப்பாணத்தில் புத்தர் சிலை நிறுவுகின்ற செயல்பாடு நடைபெற்றது.

இவ்வாறாக இந்த அரசு இக்கட்டான நிலைமையில் இருக்கின்ற சந்தர்ப்பத்திலே நாங்கள் இந்த அரசைக் காப்பாற்றுகின்ற செயல்பாட்டில் ஈடுபடக்கூடாது.

எனவே நாங்கள் எமது தலைமைத்துவக் குழு தீர்மானித்ததன் பிரகாரம் நல்லெண்ண சமிக்ஞையை ஜனாதிபதி வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறு நல்லெண்ண சமிக்ஞைகளை அவர் வெளிப்படுத்தாதவரை நாம் பேச்சு செல்லமாட்டோம் - என்றார். (ஐ)

## மூளாயில்...

இதில், யாழ். நகரில் விற்பனை நிலையம் ஒன்றில் கணக்காளராக பணியாற்றும் காரைநகர் - கருங்காலியை சேர்ந்த சங்கரப்பிள்ளை நித்தியானந்தராசா (வயது49) என்பவரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் யாழ். பல்கலைக் கழக மாணவனான மூளாயைச் சேர்ந்த ஆனந்தகுமார் கஜீபன் என்பவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் தலையில் படுகாயமடைந்தவர் அதிக இரத்த இழப்புக் காரணமாக சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

காயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## காங்கேசன்...

பகுதிகள் குடியி ருப்பு பகுதிகளாக மாறியுள்ளன.

2021 பெப்ரவரி 08 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை யின் பயன்படுத்தக்கூடிய கட்டடங்களை தவிர ஏனைய கட்டடங்களை இடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எனினும் 80 வீதமான கட்டடங்களை புனரமைத்து பயன்படுத்த முடியும் என கௌரவ பிரதமரின் இந்த கண்காணிப்பு விஜயத்தின்போது தெரியவந்துள்ளது.

அதற்கமைய காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை புனரமைக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

பிரதமரின் இந்த கண்காணிப்பு விஜயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் காமினி ஏகநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# அரசாங்கத்தை ஆதரிப்போம்! ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

**இறுக்கமான பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தினால் அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சி ஆதரவளிக்கும் - இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போதைய அரசாங்கம் எவரின் ஆலோசனையையும் செவிமடுப்பதில்லை தன்னிச்சையாகத் தீர்மானம் எடுக்கின்றது. மின்சாரக் கட்டணம் ஐந்து மடங்கு அதிகரிக்கும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இறுக்கமான பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தினால் அரசுக்கு எதிர்க்கட்சி ஆதரவளிக்கும். எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறந்த பொருளாதார அறிவுள்ளது.

தற்போதைய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தன்னிச்சையாக செயல்படுகின்றார். இந்தியாவிடம் மிருந்து பெற்ற கடனைச் செலவு செய்த பின்னர் அவர் கடன் பெறு வதற்காக வேறு ஒரு நாட்டுக்குச் செல்வார்.

ஜனாதிபதியாலோ, பிரதமராலோ பஸில் ராஜபக்சவின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சியில் பஸிலின் கை மேலோங்கியுள்ளது. குடும்ப ஆட்சி நடத்தும் ராஜபக்சக்கள், நாட்டுக்கு ஒரு சாபம் ஆகும்" - என்றார். (ஐ)

# மின்துண்டிப்பு பெயரில் அரசுக்கு இறை தண்டனை கிடைத்துள்ளது

## ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

கல்முனை, மார்ச் 21

"மின் துண்டிப்பு" எனும் பெயரில் ஆட்சியாளர்களுக்கு இறை தண்டனை கிடைத்துள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கொரோனா தொற்றால் மரணித்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கவிடாமல் பலாத்காரமாக எரித்ததன் சாபத்தை அவர்கள் இன்று அனுபவிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற "ரிஷாத் பதியுதீன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின்" பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "இன்று நிலைமை தலைகீழாக மாறி இருக்கிறது. ஆட்சியாளர்களுக்கு வாக்களித்த 69 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர்.

"ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்து நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள் என்று மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். "நேற்று முன்தினம் ஒரு காட்சி, நேற்று கட்சி, நாளை ஒரு கட்சி என உலகத்தில் எந்த ஜனாதிபதிக்கும் நடக்காத விடயம் நமது நாட்டில் நடந்தேறிக் கொண்டிருக்கிறது" என்றார்.

மேலும், "இளைஞர் சமூகத்தை குறிவைத்து அவர்களை அதள பாதாளத்துக்குத் தள்ளிவிடும் போதை வஸ்துப் பாவனை எமது சமூகத்தில் வேகமாக ஊடுருவி வருகிறது.

"எனவே, நமது இளைஞர்களை விளையாட்டு கழகங்கள் உடைய பிரதிநிதிகள் வழி நடத்த வேண்டும். அவர்களுக்கு விழிப்பூட்டல் செய்யவேண்டும். சமூகத்தில் பலம் வாய்ந்த சக்தியாக இளைஞர் சமூகம் மாற வேண்டும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.

# பொய்கள் மேலோங்குவதால் ஆபத்தான நிலையில் நாடு!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, மார்ச் 21

இன்று பொய்கள் மேலோங்கி வருகின்றன. இதன்விளைவாக நாடு ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மதவழிபாடொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது தொடர்ந்துரைத்த அவர்,

"பொய்கள், கட்டுக்கதைகள் மூலம் நாட்டை நடத்தும் அரசாங்கம் நாட்டை பொய் யாக்கி மக்களை வீதியில் தள்ளியுள்ளது. வரிசைகள் யுகத்தில் நிற்கும் மக்கள் ஆதரவற்ற நிலையில் உள்ளனர். தொலைநோக்கு உறுதிப்பாடுகள் காரணமாக இன்று தரிசு நாடுகள் ஆபிரிக் காவின் சிங்கப்பூர் ஆகிவிட்டன. நச்சு இரசா யன குண்டுகளால் அழிந்த வியட்நாம் விரைவான வளர்ச்சியை நோக்கி நகர்ந்து வருகிறது.

இத்தனைக்கும் மத்தியில் இலங்கை நாளுக்கு நாள் சீரழிந்து வருகின்றது. தங்கள் பிள்ளைகளுக்கு பால் மாவை பெற்றுக்கொடுப்பதற்காக தாய்மார் வரிசையில் நிற்கின்றனர். வரிசையில் காத்திருந்தும் பால்மாவை பெற்றுக்கொள்ள முடியாத துர்பாக்கிய நிலையே காணப்படுகின்றது.

கூலி வேலை செய்பவர்கள், அன்றாடம் உழைத்து உண்ணுபவர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள், சுயத் தொழில் முயற்சியாளர்கள், நடுத்தர வர்க்கத்தினர், மத்தியத்தர வர்க்கத்தினர் என சகல தரப்பினரும் இன்று அசாதாரண நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

வீழ்ந்திருக்கும் இடத்திலிருந்த மீண்டெழ முடியுமா என்றே அநேகமானோர் கேள்வி எழுப்புகின்றனர். நாடு என்ற முறையில் - மக்கள் என்ற முறையில் எம்மால் இந்தப் பிரச்னைகளிலிருந்து மீண்டெழ முடியும். இது உறுதியான நிலைப்பாடு. எனினும், பொய்களைக் கூறி மீண்டெழ முடியாது. ஏமாற்றுவதனூடாக மீண்டெழ முடியாது. உண்மையை கூறி நேர்மையாக பணியாற்றக் கூடிய ஒரு தலைவர் தேவை. அவ்வாறான ஒரு தலைவர் இருக்கும்போது எம்மால் நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியும்" - என்றார். (கே)

# இன்றும் ஆறரை மணி நேரம் மின்வெட்டு நடைமுறையாகும்!

கொழும்பு, மார்ச் 21

இன்றைய தினமும் நாட்டின் பல பகுதிகளில் மின்வெட்டை மேற்கொள்ள இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது. தேசிய பொதுப் பயன்பாடுகள் திணைக்களம் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

அதன்படி, பி, கியூ, ஆர். எஸ், ரி, யூ, வி, டபிள்யூ வலயங்களுக்கு காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை 2 மணி 40 நிமிடங்களும் மற்றும் மாலை 5 மணி முதல் இரவு 10.30 மணி வரை ஒரு மணி 50 நிமிடங்களும் மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, ஏ, பி, சி, டி, ஈ, எவ், ஜீ, எச், ஐ, ஜே, கே, எல், வலயங்களுக்கு காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை 3 மணி 20 நிமிடங்களும் மற்றும் மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை ஒரு மணி நேரம் 40 நிமிடங்களும் மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# நேற்றும் ஐந்து பேர் கொரோனாவுக்கு பலி!

கொழும்பு, மார்ச் 21

நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி 5 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு நேர்ந்த மரணங்களில் 3 ஆண்களும் 2 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 5 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர்.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 431ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

# முகக்கவசத்தின் விலை 30சதவீதத்தால் உயர்வு!

கொழும்பு, மார்ச் 21

முகக்கவசத்தின் விலை இன்று திங்கட்கிழமை முதல் 30 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என்று முகக்கவச உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முகக்கவசங்களை தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் விதுர அல்கம தெரிவித்துள்ளார்.

இந்த விலையுயர்வு இன்று திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

UK இல் கல்வி வாய்ப்பு
13 வயது தொடக்கம் 22 வயது வரையுள்ள அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
13 வயது தொடக்கம் 17 வரையுள்ள மாணவர்களுக்கு உடன் விசா வழங்கப்படும்.
Grade 08 London → 4Years → O/L London → 2Years → A/L London → University UK
•Medicine
•Engineering
•IT & Others
தொடர்புகளுக்கு :
Tel : +94 74 229 3324 | Whatsapp : +44 7958 408 280
Email : principal@croydonmet.org.uk, joseph.vilvaraj@gmail.com

பயிற்சி ஊடகவியலாளர்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் முன்னணி நாளிதழ் ஒன்றுக்கு பயிற்சி ஊடகவியலாளர்களாக இணைந்து கொள்ள விருப்பமுள்ளவர்களிடம் விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.



■ எழுத்துத்துறையில் ஆர்வமுள்ள
■ துடிப்பும் துணிவும் உள்ள
■ செய்தித்துறையில் விருப்புள்ள
■ சாதிக்கும் எண்ணம் கொண்ட
இளைஞர், யுவதிகள் இதில் இணைந்துகொள்ள முடியும்.
மேலதிக தொடர்புகளுக்கு:
075 315 3153
trainingjournalistjaffna@gmail.com

O/L கணிதம்
LIVE
கல்வி CHANNEL-1
fb.me/dankalvitv
Kalvi TV



O/L Media
LIVE
கல்வி CHANNEL-1
fb.me/dankalvitv
Kalvi TV



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.